பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

கடகம்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 13 செவ்வாய்க்கிழமை (29-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:243

மட்டக்களப்புக் கூட்டத்தில் அறிவிப்பு:

அரசின் வரைவுக்கு புலிகள் திருத்தங்கள் சமர்ப்பிப்பர்!

அதை ஏற்றுக்கொண்டால் பேச்சுக்கள் தொடரும் என்கிறார் தமிழ்ச்செல்வன்

மட்டக்களப்புஜூலை29

"இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக அரசு இது வரை மூன்று வரைவுகளை எமது அமைப்பிடம் வழங்கியிருந்தது. அதில் இரண்டை நாம் ஏற்கனவே நிராகரித்து விட்டோம். தற்போது வழங்கப்பட்டுள்ள மூன்றாவது வரைவை எமது தலைமைப்பீடம், இயக்கத்தின் சட்ட வல்லுநர்களுடன் ஆராய்ந்து வருகின்றது. அதில் பல திருத்தங்களைச் செய்து தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வரைவை மிக விரைவில் நாம் அரசிடம் வழங்கவுள்ளோம். அதை அரசு ஏற்றுக் கொண்டால் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கமுடியும்"

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவிக்கின்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு முதற் றடவையாக நேற்றுமுன்தினம் வருகை தந்த சு.ப.தமிழ்ச்செல்வன், கட்டன் அன்பரசியின் 8ஆம் ஆண்டு நினைவை யொட்டி விடுதலைப் புலிகளின் தாரவை மீனக வணாகத்தில் நடைபெற்ற பிரதான நிகழ்வில் கலந்து கொண்டு போராளிகள், பொதுமக்கள் ஆகியோர் மத்தியில் உரையாற்றினர். அப்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போராட்ட வாழ்வில் இன்று எனக்கு மகிழ்ச்சியான, மறக்கமுடியாத நாளாகும். தென்தமிழீழத்துக்கு வருவதற்கு பல தடவைகள் முயற்சித்தேன். இரண்டு நாள்களுக்கு முன்பே தலைவர் அதற்கு அனுமதி வழங்கியிருந்தார்.

கடந்த காலங்களில் தென் தமிழீழம் அனுபவித்த கொடுமைகள் பல. பல்வேறு படுகொலைகள் இங்கு இடம்பெற்றுள்ளன. சர்வதேச சமூகம் பல்வேறு படுகொலைகள் பற்றிப் பேசுகின்றது. ஆனால், அவற்றுடன் ஒப்பிடும்போது தென்தமிழீழத்தில் நடைபெற்ற படுகொலைகள் மிகவும் பயங்கரமானவை.

(14ஆம் பக்கம் பார்க்க)

இடைக்கால நிர்வாக வரைவில்

சிறு வித்தியாசங்களை பெரிதுபடுத்துகிறது சு.க.

அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை29

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான வரைவில் உள்ள சிறு வித்தியாசங்களைப் பெரிதுபடுத்தி சிக்கல்களை உருவாக்கப்பார்க்கிறது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

தகவல் தினைக்கள கேட்போர்கூடத்தில் நேற்று நடத்திய விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

நோர்வே அனுசரணையாளர்களுக்கு அரசு கையளித்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவில் பாதுகாப்பு, பொலீஸ், காணி வருமானம் ஆகிய விடயங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை.

(02ஆம் பக்கம் பார்க்க)

இந்திய மீனவர்கள் நால்வர் யாழ்.சிறையில் உண்ணாவிரதம்

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர் நால்வர் தம்மை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி நேற்று முன்தினம் முதல் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆர்.பாலு, எம்.கந்தர், கே.சிவாநந்தன், எ.சந்திரன் ஆகிய நான்கு மீனவர்களுமே உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

கடந்த மார்ச் மாதம் பருத்தித்துறை கடற்பகுதியில் இலங்கை

(14ஆம் பக்கம் பார்க்க)

பொதுக் கட்டடங்களில் தங்கியுள்ள

படையினரை இடம்மாற்றுவதற்கு வடமராட்சி கிழக்கில் புதியதளம்

இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை29

யாழ்குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே நிலைகொண்டுள்ள படையினரை வேறிடத்துக்கு மாற்றும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக வடமராட்சி கிழக்கில் உள்ள பொற்பதியில் இராணுவத்தளம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்துள்ளார்.

இந்தப் புதியதளம் அமைக்கும் பணி கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக இராணுவத் தளபதி மேலும் தெரிவித்ததாவது:-

உயர்பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே படையினர் தங்க சுமார் 88 இடங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அவற்றில் அரசுக்கு சொந்தமான 15 இடங்களும் அடங்கும் தனியாருக்குச் சொந்தமான இடங்களில் தங்கியுள்ள இராணுவத்தினர் முன்னுரிமை அடிப்படையில் இந்த இடங்களுக்கு மாற்றப்படுவார்கள்.

விடுதலைப் புலிகளுடன் அரசு செய்துகொண்ட உடன்படிக்கையின்படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

புதிய தளங்கள் தயாரானதும் தனியாரின் இடங்களில் தங்கியுள்ள படையினர் வெளியேறிவிடுவார்கள்.

ஆயினும், பொதுமக்கள் காட்டும் எதிர்ப்பினால் புதிய இடங்களுக்கு

(02ஆம் பக்கம் பார்க்க)

நோர்வேத் தூதர் கொழும்பு திரும்பினார்

நோர்வேக்கு சென்றிருந்த இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் நேற்று திங்கட்கிழமை மீண்டும் கொழும்பு திரும்பினார்.

நேற்று அதிகாலை 5.15 மணியளவில் இவர் கட்டுநாயக்க விமான நிலையத்தினை வந்தடைந்ததாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. மூன்றுவார காலங்களுக்கு முன்னர் இவர் நோர்வே சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தற்போது இலங்கையில் தங்கியுள்ள நோர்வேயின் முன்னாள் தூதுவர் ஜேன் வெஸ்பேர்க் நாளை புதன்கிழமை நோர்வே செல்லவுள்ளார். நோர்வே செல்லும் இவர் ஒருவார காலத்தின் பின் இலங்கை திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

முல்லைக் கடலில் புலிகள் கூட்டுப் பயிற்சி; கண்காணிப்புக் குழுவிடம் கடற்படை புகார்

முல்லைத்தீவுக் கடலில் நேற்று முன்தினமிரவு, விடுதலைப் புலிகள் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டனர் என்று கடற்படையினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

திருகோணமலையிலுள்ள கடற்படை தலைமையக அதிகாரிகள் நேற்றுமுன்தினமிரவு 11.30 மணியளவில் இந்த முறைப்பாட்டைச் செய்திருக்கின்றனர்.

இந்த முறைப்பாட்டையடுத்து நேற்று அதிகாலை 1.30 மணியளவில் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுடன் கடற்படையின் நான்கு படகுகள் முல்லைத்தீவுக் கடல் பிரதேசத்துக்கு சென்றன என்று கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்திருக்கின்றனர்.

கடற்படைக் கப்பல்கள் குறிப்பிட்ட இடத்தை நெருங்கிய வேளையிலும் புலிகளின் பல படகுகள் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளரான அத்னல் பிரகடோட்டியர் கூறியிருக்கிறார்.

புலிகளின் ஏழு படகுகள் அப்பகுதியில் காணப்பட்டன என்றும் கடற்படை கப்பல்கள் அந்த இடத்தை அடைந்ததும் கூட்டுப் பயிற்சிகள் நின்றுவிட்டன என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்

முல்லைத்தீவுக் கடலில் புலிகளின் படகுகள் காணப்படுவதோடு, கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஒருவருடன் நான்கு கடற்படைப் படகுகளும் அக்கடலில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன எனவும் பேச்சாளர் அத்னல் கூறியிருக்கிறார். (ஐ)

'காஸ் சிலிண்டர்' கசிந்ததால் தீவிபத்து; இளம்பெண் உயிரிழப்பு!

யாழ். நீராவியடியில் துயரம்

யாழ்ப்பாணம்,ஜூலை 29

சமையலறையிலிருந்த 'சிலிண்டரில் காஸ்' கசிந்ததால் ஏற்பட்ட தீவிபத்தில் இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார். தீயை அணைக்க முயற்சித்த அவரது கணவரின் இரு கைகளிலும் எரிகாயங்கள் ஏற்பட்டன.

யாழ்ப்பாணம், நீராவியடி கடையிற் சுவாமி வீதியிலுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் ஒரு குழந்தைக்குத் தாயான நீருஜா(வயது 18)என்பவரே பலத்த தீக்காயங்களுக்கு உள்ளாகி நேற்று யாழ். மருத்துவமனையில் உயிரிழந்தார். அவரது கணவரான க.வசீகரன்(வயது 22) கைகள் லேற்பட்ட தீக்காயங்களுக்கு மருத்துவமனையில்

(14ஆம் பக்கம் பார்க்க)

குரங்குபாஞ்சான் முகாம் விவகாரம்:

கண்காணிப்புக் குழுவிடமிருந்து புலிகளுக்கு மற்றுமொரு கடிதம்

கிண்ணியா, குரங்குபாஞ்சான் பகுதியில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ள முகாம் தொடர்பாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விடுதலைப் புலிகளுக்கு தாம் மற்றுமொரு கடிதத்தினை அனுப்பியிருப்பதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவிக்கின்றது.

புலிகளின் பதிலைப் பொறுத்தே தங்களது அடுத்த நடவடிக்கை அமையும் என கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னேஸ் அமையர் தெரிவிக்கின்றார்.

தனிப்பட்ட விடுமுறை காரணமாக தற்போது நோர்வே சென்றுள்ள கண்காணிப்புக் குழுவின் தலைவர் ப்ரிவே

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

பாதுகாப்பு வலயத்தினுள் பக்தர்கள் படையெடுப்பு

கீரிமலையில் தீர்த்தமாட நேற்று ஆயிரக்கணக்கானோர் திரண்டனர்

யாழ்ப்பாணம்,ஜுலை29

ஆயிரக்கணக்கான இந்து பக்தர்கள் நேற்று கீரிமலையில் தீர்த்தமாடி பிதிர்க்கடன்களை நிறைவேற்றினர்.

ஆடி அமாவாசை விரத நாளான நேற்று குடாநாட்டில் பல பகுதிகளிலும் இருந்து சென்ற பக்தர்களால் கீரிமலை பகுதி சனத்திரளாகக் காட்சியளித்தது.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருக்கும் கீரிமலைப் பகுதிக்கு செல்வதற்காக பலநூற்றுக்கணக்கான பக்தர்கள் காலை 6.00 மணிமுதல் தெல்லிப்பழை மற்றும் சேந்தாங்குளம சோதனை நிலையங்களின் முன்பாகத திரண்டனர்.

கீரிமலை மற்றும் மாவிட்டபுரம் செல்லும் பக்தர்கள் 7.00 மணிக்குப் பிறகு படையினர், சோதனையின் பின்னர் பஸ்களில் செல்ல அனுமதித்தனர்.

வழமைபோன்று சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பக்தர்களுடன கூடவே படையினரும் உடன் சென்றனர்.

சேந்தாங்குளம் சோதனை நிலையம் ஊடாக சிறிய வாகனங்களிலும் சைக்கிள்களிலும் பக்தர்கள் செல்வதற்கு முதலில் அனுமதிக்கப்பட்டனர். சில மணி நேரங்களின் பின்னர் சைகிள்களில் செல்வது நிறுத்தப்பட்டது.

சிறிய 'ஹைஏஸ்' ரக வான்களில் பக்தர்கள் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். இதனால், பெரும் எண்ணிக்கையானோர் குடும்பம் குடும்பமாக கீரிமலை போய்ச் சேர்ந்தனர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் இருந்து சுவாமி புறப்பட்டு காலை 9.00 மணியளவில் கீரிமலையில் தீர்த்தமாட எழுந்தருளினர். கீரிமலை நகுலேஸ்வரர் கோவில் சுவாமியும் ஒன்றாக தீர்த்தமாட வீதி வலம் வந்த காட்சியை பக்தர்கள் கண்டு களித்தனர்.

பெரும் எண்ணிக்கையானோர் நீராட வந்ததால் கேணியில் போதிய நீர் காணப்படவில்லை. இதனால், பலரும் கடலில் இறங்கி நீராடினர். கீரிமலைக் கடலில் இறங்கி நீராட படையினர் வழமையாக அனுமதிப்பதில்லை என்றாலும் நேற்று பக்தர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை அங்கு காணப்பட்டது.

யாழ்நகரில் இருந்து வலி.வடக்கு பகுதிகளுக்கான பஸ் சேவைகள் நேற்று தெல்லிப்பழை சேந்தாங்குளம சோதனை நிலையங்கள் வரை நடிக்கப்பட்டிருந்தன. பஸ்களிலும் தங்கள் சொந்த வாகனங்களிலும் பக்தர்கள் கீரிமலைக்கு வந்திருந்தனர். நூற்றுக கணக்கான மினி வான்களும், ஓட்டோக்களும், கார்களும் அங்கு காணப்பட்டன.

புலம் பெயர்ந்த நாடுகளில் இருந்து தாயகம் வந்துள்ள குடும்பங்களை அதிக எண்ணிக்கையில் அங்கு காண முடிந்தது.

வழமைபோன்று தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் தண்ணீர்ப் பந்தல் அமைத்து தாகசாந்தி செய்தனர். தனியார் வர்த்தகர் ஒருவரும் அடியார்களுக்கு 'கோப்பி' வழங்கும் சேவையை அங்கு ஏற்பாடு செய்திருந்தார்.

கீரிமலைக்குச் செல்லும் வீதிகளில அதிக எண்ணிக்கையில் படையினரும் பொலீஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

சாரணர்களும், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்களும் அங்கு சேவை புரிந்தனர். (ஐ-86-5)

இன்று புலிகள் – முஸ்லிம்கள் அக்கரைப்பற்றில் குழுக் கூட்டம்

காரைதீவு,ஜுலை29

அம்பாறை மாவட்டக் காணிப் பிணக்குகள் தொடர்பாக ஆராயும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான அக்கரைப்பற்று வலய உப குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்துக்கு முஸ்லிம்கள் சார்பில் டாக்டர் ஐப்பாரும், புலிகள் சார்பில் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவாவும் தலைமை வகிப்பர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு சார்பில் ரேர்ஜி ஹல்வசன், பிற்றலீ ஆகியோர் கலந்துகொள்வர். இன்று நடைபெறவிருக்கும் உப வலயக் கூட்டம் மூன்றாவது கூட்டமென்பது குறிப்பிடத்தக்கது.

காரைதீவுப் பிரதேசத்திற்கான மூன்றாவது உப வலயக் கூட்டம் எதிர்வரும் வியாழனன்று நடைபெறும் அம்பாறை வலயக் கூட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் 2ஆம் திகதி அம்பாறைக் கச்சேரியில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ரயில்வே தொழிற்சங்கங்கள் இன்று அமைச்சர் மாரப்பனவுடன் பேச்சு

ரயில்வே திணைக்களம் ரயில்வே அதிகாரச் சபையாக மாற்றப்பட்டது குறித்து பாதுகாப்பு, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் திலக் மாரப்பனவுடன் ரயில்வே தொழிற் சங்கங்கள் கூட்டு முன்னணி இன்று பேச்சு நடத்தவிருக்கிறது.

ரயில்வே ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அமைச்சருடன் பேசவிருப்பதாகவும் அப்பேச்சுக்கள் பலனளிக்காவிடின் நாளை 30ஆம் திகதி முதல் கடும் தொழிற் சங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் பிரதம செயலாளர் அமரசேன வெத்தாகல தெரிவித்திருக்கிறார்.

அதிபர்கள் சங்கம், கார்ட்மார் சங்கம், பொறியியலாளர் சங்கம், ரயில் கட்டுப்பாட்டாளர் சங்கம் உட்பட பல சங்கங்களின் பிரதிநிதிகள் அமைச்சருடனான பேச்சில் கலந்து கொள்வர். (ஐ)

கண்ணி அகற்றும் நிறுவனத்தின்

தொலைத்தொடர்பு கருவிகள் திருடப்பட்டதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜுலை29

குடாநாட்டில் கண்ணி அகற்றும பணியில் ஈடுபட்டுவரும் 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்தின் ஆறு தொலைத் தொடர்புக் கருவிகள் களவாடப்பட்டுள்ளதாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 25ஆம் திகதி நல்லூர் செட்டித்தெருவில் உள்ள இந்த நிறுவனத்தின் வாகனத் தரிப்பு நிலையத்தில் உள்ள அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த நிறுவன அதிகாரிகளின் 6 தொலைத் தொடர்பு கருவிகளே திருடப்பட்டன என்று அந்த நிறுவனத்தில் காவல் கடமையில் ஈடுபடும் ஊழியர்கள் இருவர் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பும் இந்த நிறுவன அதிகாரிகள் தங்கியிருந்த வீடு ஒன்றில் பல பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டிருந்தன. பின்னர் அப்பொருள்கள் பொலீஸாரால் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி)

உரும்பிராய் சிறுவர் இல்ல வழக்கில் சந்தேக நபருக்கு பிணை மறுப்பு

யாழ்ப்பாணம்,ஜுலை29

உரும்பிராய் வடக்குப் பகுதியில் இயங்கிய சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்றில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாலியல் துஷ்பிரயோக சம்பவம் தொடர்பான வழக்கில் விளக்கமறியலில் உள்ள சந்தேக நபரின் பிணைமனு மீண்டும் நிராகரிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் நேற்று யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றது. இதன்போது சந்தேக நபர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி அவரைப் பிணையில் செல்ல அனுமதிக்கக்கோரி மன்றில் பிணை மனு தாக்கல்செய்தார்.

அந்த மனுவை ஆராய்ந்த நீதிவான் இதவிக்னராஜா, பிணை மனுவை நிராகரித்ததோடு சந்தேக நபரை எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை -

இச்சந்தேக நபருக்கான பிணை மனுவொன்று கடந்த மாதம்25ஆம் திகதி நிராகரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

கண்டி மாநகர சபை பொறியியலாளர் கூட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்!

அபிவிருத்திப் பணிகள் ஆய்வின்போது முதல்வர் ஆத்திரம்

மத்திய மாகாண சபையின் கீழ் இயங்கும் கண்டி மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களினதும் திணைக்களங்களினதும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மீளாய்வு செய்ய இடம்பெற்ற கூட்டத்தில் கண்டி மாநகர சபை பொறியியலாளரை அங்கிருந்து வெளியேறுமாறு முதலமைச்சர் உத்தரவிட்டார். உடனே பொறியியலாளர் அங்கிருந்து வெளியேறினார்.

நேற்றுக் காலை மத்திய மாகாண சபைக் கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

யெற்றிட்டப் பணிகளின் முன்னேற்றங்கள் குறித்து ஆய்வுசெய்யும் கூட்டமொன்றை முதலமைச்சர் வரந்த அலுவிகார மாதம் ஒருமுறை நடத்தி வருகிறார். இக்கூட்டத்தில் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். முதலமைச்சர் அலுவிகார, அபிவிருத்தி பற்றி எழுப்பிய கேள்விக்கு தகுந்த பதிலை பொறியியலாளர் வழங்கவில்லை உடனே ஆணையாளர் எங்கே என்று வினவிய முதல்வர், அவரை உடனடியாக அழைத்துவருமாறு பொறியியலாளரை வெளியேற்றினார்.

இவ்வாறான முக்கிய கலந்துரையாடலின் போது அதிகாரிகளோ, பிரதேச சபைத் தலைவர்களோ சமுகமளிக்காது போனால் வாரதூரமாகக் கணிக்கப்படும் எனக் கூறிய முதலமைச்சர், மாகாண சபைத் தேர்தல் இடம்பெற இன்னும் சில மாதங்களே இருப்பதால் அதிகாரிகள், மக்களின் நலன் கருதி தமது பணியைத் துரிதமாக்கவேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

அக்குறணை பிரதேச சபைத் தலைவர் எஸ்.எச்.எம்.கலைமான், மாகாண அமைச்சர் எம்.எஸ்.எம்.ஷபி மத்திய மாகாண சபைத்தலைவர் துரை மதியுகராஜா ஆகியோரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அடுத்த ஆய்வுக் கூட்டம் பள்ளேகல மாகாண சபை மண்டபத்தில் ஒக்ஸ்ட் மாதம் 8ஆம் திகதி இடம்பெறும். -

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பத்திரம் அம்பலமானதால்

ராஜதந்திர பத்திரம் எதனையும் ஜனாதிபதிக்கு வழங்கக்கூடாது

சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் போர்க்கொடி

கொழும்பு,ஜுலை29

சமாதானப் பேச்சுக்கள் குறித்தோ அல்லது வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்தோ தயாரிக்கப்படும் எந்த ஒரு ராஜதந்திர பத்திரத்தையும் எதிர்காலத்தில் ஜனாதிபதிக்கு வழங்கக்கூடாதென அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் கருதுகின்றனர் எனக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்க அந்த அமைச்சர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் என்றும் அறியப்படுகிறது.

வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து மிகவும் இரகசியமானது என்ற முத்திரையுடன் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்ட பத்திரம் ஒன்று பூரணமாக ஊடகங்களுக்கு அம்பலப்படுத்தப்பட்டதே இதற்கான காரணமாகும்.

கடந்த வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் ஜனாதிபதியின் ஆலோசகரான லக்ஷ்மன் கதிர்காமர் அப்பத்திரத்தைப் பகிரங்கப்படுத்தினார்.

'மிகவும் இரகசியமான' அப்பத்திரம் அம்பலப்படுத்தப்பட்டமை ராஜதந்திர சம்பிரதாயங்களை மீறும் ஒரு செயல் என்று அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறியிருக்கிறார்.

இவ்வாறு பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்ளும் ஒரு கட்சிக்கு அல்லது அதன் தலைவர்களுக்கு சமாதான நடவடிக்கைகள் தொடர்பான முக்கிய தகவல் எதுவும் வழக்கப்படக் கூடாது என்று மற்றோர் அமைச்சர் கூறியிருக்கிறார். (ஒ)

85 சதவீதமான குடும்பங்கள் தென்மராட்சியில் மீள்குடியமர்வு

தென்மராட்சி,ஜுலை29

தென்மராட்சி பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களில் 85 சதவீதமான குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தில் 1995ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரை 23 ஆயிரத்து 149 குடும்பங்களைச் சேர்ந்த 88 ஆயிரத்து 254பேர் தங்கியிருந்ததாகவும் -

கடந்த ஜுன் 30ஆம் திகதி 19 ஆயிரத்து 201 குடும்பத்தைச் சேர்ந்த 69ஆயிரத்து 756 பேர் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளதாகவும் -

பிரதேச செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு, கரம்பகம், தனங்கள்ப்பு, மாவன்புலோ, கைதடி, நாவற்குழி, ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்து 200 குடும்பங்கள் இப்பகுதிகளில் இன்னமும் மீளக் குடியமர அனுமதிக்கப்படாததால் ஏனைய பிரதேசங்களில் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

சிறு வித்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த விடயங்கள் குறித்து ஜோன் வெஸ்பேர்க், அரசிடம் வினவினார். அதன்படியே அந்த நான்கு விடயங்கள் குறித்தும் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட திட்ட வரைவில் குறிப்பிடப்பட்டது. இந்த நான்கு விடயங்களையும் தவிர்த்தே அரசு திட்ட வரைவை முன்வைத்தது.

நோர்வே அனுசரணையாளர்களுக்கு அரசு வழங்கிய இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவிலும் ஜோன் வெஸ்பேர்க் தயாரித்த ஆவணங்களுக்கும் இடையே எதுவித வித்தியாசமும் இல்லை. மேலும், நோர்வே அனுசரணையாளர்களுக்கு எமது பிரச்சினை குறித்து நன்கு தெரியும் என்பதால் திட்ட வரைவில் முகவுரை சேர்க்கப்படவில்லை. ஜோன் வெஸ்பேர்க், புலிகளிடம் கையளித்த ஆவணத்தில் முகவுரை சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் திட்ட வரைவு இறுதியானது அல்ல. நாளுக்கு நாள் இதில் மாற்றம் ஏற்படலாம். இருதரப்பும் கைச்சாத்திடும் வரை மாற்றங்கள் செய்ய இடமுண்டு.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளபடி இரண்டு வரைவுகளும் வெவ்வேறானவை அல்ல. சிறு சிறு வித்தியாசங்களைப் பெரிதுபடுத்தி அக்கட்சி சிக்கல்களை உருவாக்கப்பார்க்கின்றது. - இவ்வாறு அவர் சொன்னார். (ஒ)

போதையுடன் வீதியில் நின்று

கத்திகாட்டி மிரட்டியவர் பொலீஸாரிடம் சிக்கினார்

நுணாவில் பகுதியில் சம்பவம்

மதுபோதையில் பொதுமக்களை கத்திகாட்டி அச்சுறுத்திய நபரொருவர் சாவகச்சேரி பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

நுணாவிலில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட நபர் மதுபோதையில் கையில் கத்தி ஒன்றை ஏந்திய படி வீதியில் நின்று பொதுமக்களை அச்சுறுத்திக்கொண்டிருந்ததாகவும் - அப்போது சாவகச்சேரிப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் மெண்டிஸ் தலைமையிலான பொலீஸ் குழுவினர் வேறொரு பணிக்காக அங்கு சென்றதாகவும் -

அவர்கள் மேற்படி நபரை மடக்கிப்பிடித்துக் கைதுசெய்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

படையினரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரை இடம்மாற்றுவதை உடன் செயற்படுத்த முடியாதுள்ளது.

வடமராட்சி கிழக்கில் தற்போது முகாம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் இடத்தில் கூட கடந்த வியாழக்கிழமை ஒரு தொகுதி மக்கள், இராணுவம் அப்குதியில் நிலைகொள்ளக்கூடாதென வலியுறுத்தி போராட்டம் நடத்தினார்கள். பின்னர் கண்காணிப்புக்குழுவினர் அங்கு சென்று இராணுவ சிரேஷ்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

யாழ்நகரில் இரு விடுதிகளில் தங்கியுள்ள படையினரை வேறிடத்துக்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், பொதுமக்கள் காட்டிய எதிர்ப்பால் அது தடைப்பட்டது. தற்போது அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் அந்த முகாம் விரைவில் அமைக்கப்படும்.

இதேவேளை, தற்போது யாழ்குடாநாட்டில் உள்ள படையினரின் எண்ணிக்கையில் மாற்றம் இருக்காது. நாட்டின் நிலைமை சீரடைந்தால் படையினரைக் குறைப்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் இராணுவத் தளபதி. (ஒ-ரி)

குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெயர்; உலகத் தமிழர் பேரவை தீர்மானம்!

சென்னை,ஜுலை29

உலகிலுள்ள தமிழ் மக்கள் அனைவரும் தமது குழந்தைகளுக்கு தமிழப் பெயர்களையே வைக்கவேண்டும். பெற்றோர்களும் தமது பெயர்களை தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

- இவ்வாறு தமிழகத்தில் உள்ள உலகத் தமிழர் பேரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்த அமைப்பின் முதலாண்டு நிறைவு மாநாடு மற்றும் உலகத் தமிழர் நாள் விழா என்பன ஞாயிற்றுக் கிழமை சென்னை கலையரங்கில் இடம் பெற்றன. இந்த மாநாட்டிலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அங்கு மேலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

உலகத் தமிழர்கள் அனைவரும் அடிப்படைத் தமிழ் உடையாகிய வேட்டி, சேலை என்பவற்றை நாள்தோறும் பயன்படுத்தவேண்டும். தமிழை செம்மொழியாக இந்திய மத்திய அரசு அறிவிக்கவேண்டும். 2004ஆம் ஆண்டை உலகத் தமிழ் ஆண்டாக அறிவிக்க வேண்டும்.

தமிழகம் மற்றும் புதுவை மாநிலங்களில் ஆட்சி மொழி, தொடர்பு மொழி, கல்வி பயிற்றுவிக்கும் மொழி என்று அனைத்து வழிகளிலும் தமிழ் மொழி பயன்படுத்தப்படவேண்டும்.

தமிழ் மக்கள் அதிக எண்ணிக்கையில் உள்ள அனைத்து நாடுகளிலும் தமிழை பயிற்றுமொழி ஆக்க வேண்டும். இதற்கு உலகத் தமிழ் மக்கள் உதவவேண்டும். தமிழக அரசும் தமிழ்ப் பல்கலைக்கழகங்களும், தமிழ் இணையப் பல்கலைக்கழகங்களும் இந்தப் பணியில் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்யவேண்டும்.

தமிழகத்தில் ஆங்கிலப் பாடம் முதலாம் வகுப்பில் இருந்து சேர்க்கப்பட்டது மிகவும் தீங்கானது. இதை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும்.

பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பழநெடுமாறன் உட்பட அமைதியை விரும்பும் தமிழர் களை தமிழக அரசு உடனடியாக விடுதலை செய்யவேண்டும்.

- என்று தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

540 பலஸ்தீன கைதிகளை விடுவிக்க இஸ்ரேல் முடிவு!

ஜெருசலேம்,ஜுலை29

மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுக்களுக்கு வலுச் சேர்க்கும் வகையில் தன்வசம் இருக்கும் பலஸ்தீனக் கைதிகளில் 540பேரை விடுவிப்பதற்கு இஸ்ரேல் அரசு முடிவு செய்துள்ளது. இவர்களில் ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்களும் அடக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேலின் இந்த முடிவுக்கு பலஸ்தீனத் தரப்பில் இருந்து பெரும் வரவேற்புக் கிடைத்துள்ளது.

"இது இஸ்ரேலிய அரசிடம் இருந்து கிடைத்த சாதகமான அம்சம்" - என்றார் பலஸ்தீன தகவல்துறை அமைச்சர் நபில் அமர்.

ஆனால், இஸ்ரேல் வசம் இருப்பதாக நம்பப்படும் 6ஆயிரம் பலஸ்தீனக் கைதிகளில் மேலும் பலர் விரைவில் விடுவிக்கப்படுவதைத் தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் சொன்னார்.

விடுவிக்கப்பட உள்ள கைதிகளில் 210பேர் ஹமாஸ் மற்றும் இஸ்லாமிக் ஜிகாத் ஆகிய ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்கள். மற்றொரு 210பேர் அரபாத்தின் பாத் அமைப்புடன் தொடர்புடையவர்கள், எஞ்சிய 120 பேரும் இஸ்ரேலில் கிரிமினல் குற்றங்களுடன் தொடர்புடைய பலஸ்தீனர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், சில பலஸ்தீன அதிகாரிகள் இஸ்ரேலின் நடவடிக்கையை விமர்சித்துள்ளனர். வாஷிங்ரனை திருப்திப்படுத்துவதற்காக இஸ்ரேல் இத்தகைய ஓர் அதிரடி முடிவை அறிவித்ததாக அவர்கள் கூறுகின்றனர்.

இஸ்ரேலிய அரசின் இந்த நடவடிக்கையை பலஸ்தீன ஆயுதக் குழுக்கள் தீவிரமாக அவதானித்து வருகின்றன. இஸ்ரேல் வசம் இருக்கும் பலஸ்தீனக் கைதிகள் அனைவரும் விடுக்கப்பட்டாலேயே தற்காலிகப் போர் நிறுத்தத்தைத் தாம் நீடிக் கப்போவதாகவும் அவை எச்சரித் துள்ளன.

இதேவேளை -

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். நாளை அவர் வாஷிங்ரனில் அமெரிக்க அதிபரைச் சந்தித்துப் பேசுவார்.

இந்தப் பேச்சுக்களில், மேற்குக் கரையில் தமது பாதுகாப்புக்காக எல்லைச் சுவர் ஒன்றை அமைப்பது குறித்த இஸ்ரேலின் திட்டம் குறித்து முக்கியமாக ஆராயப்படும். ஆனால், தமது சுதந்திரத்தைப் பாதிக்கும் விடயம் இது என்று பலஸ்தீனர்கள் இஸ்ரேலின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். (ம)

அமெ. படையின் தேடுதலிலிருந்து இரு தடவைகள் தப்பினார் சதாம்!

பக்தாத்,ஜுலை29

ஈராக்கின் முன்னாள் ஆட்சியாளர் சதாம் ஹுசைனைத் தேடிக் கண்டு பிடிப்பதில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டுள்ளது. கடந்த இரு நாள்களில் அமெரிக்கப் படையினர் சதாமைக் குறிவைத்து மேற்கொண்ட இருவேறு தேடுதல்களில் இருந்து அவர் தப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பக்தாத்தில் நேற்று இடம்பெற்ற தேடுதலில் சதாம் தப்பிவிட ஐந்து ஈராக்கியர்கள் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்டனர்.

இதனால் ஆத்திரமடைந்த ஈராக்கியர்கள் பலர் தேடுதல் நடந்த இடத்தைச் சுற்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சதாமின் சொந்த இடமான திக்ரிற்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேடுதலில் இருந்து சதாம் தப்பிவிட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்கப் படையினர் திக்ரிற்றில் உள்ள மூன்று பண்ணைகளைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தியுள்ளனர். அவர்கள் தேடுதல் நடத்துவதற்கு 24 மணி நேரம் முன்னதாகவே சதாம் அங்கிருந்து தப்பிச்

சென்றதாக அமெரிக்கர்கள் கூறுகின்றனர்.

திக்ரிற்றுக்கு விஜயம் செய்த ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைகளின் தளபதி ஜெனரல் ரிச்சட், சதாம் கைது செய்யப்படுவது "இந்த நேரத்தில் ஒரு சின்ன விஷயம்" - என்றார்.

சதாம் எங்கு மறைந்திருக்கக் கூடும் என்ற தகவல்களை சில ஈராக்கியர்கள் எம்மிடம் தந்துள்ளார்கள். சதாமின் இரு புதல்வர்களும் கொல்லப்பட்டதை அடுத்து இது சாத்தியமாகியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேசமயம் -

ஞாயிறன்று - 24 மணி நேரத்தில் - இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களில் 5 அமெரிக்கப் படையினர் ஈராக்கில் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈராக், வெளிநாட்டு தீவிரவாதிகளைக் கவரும் ஓர் இடமாக மாறி வருவதாக அங்கு தங்கியுள்ள அமெரிக்கத் தரைப்படையின் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் ரிச்சட் சஞ்சே கூறினார்.

சதாம் ஆதரவுப் படையினரின் தாக்குதல்கள் கடந்த மாதத்தில் அதிகரித்துக் காணப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

தாம் பல்முனைத் தாக்குதல்களுக்கு ஈராக்கில் முகம் கொடுத்து வருவதாகவும் அவர் பேட்டி ஒன்றின் போது தெரிவித்தார். "தீவிரவாதத்தையும் நாம் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. கடந்த ஆட்சியாளரின் ஆதரவாளர்களையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது, குற்றவாளிகளையும் கிளர்ச்சிவாதிகளையும்கூட எதிர்கொள்வேண்டியுள்ளது. அவர்களால் எமது படையினர் நாளாந்தம் தாக்கப்படுகின்றார்கள்" - என்றார் ஜெனரல் ரிச்சட்.(ம)

படையினர் மேற்கொண்ட

மணிலா கிளர்ச்சி தொடர்பாக முன்னாள் அமைச்சர் கைது!

மணிலா,ஜுலை29

இந்தோனேஷியாவில் இராணுவத்தினர் கிளர்ச்சி செய்வதற்கு உதவினர் என்ற சந்தேகத்தின் பேரில் முன்னாள் அதிபர் ஜோசப் எஸ்ராடா பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிறன்று, கனரக ஆயுதப் பிரிவினைச் சேர்ந்த சுமார் 300 பேர் வரையில் தலைநகர் மணிலாவில் உள்ள நிலைகளைக் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். ஆனால், எந்தச் துப்பாக்கிச் சூடும் இன்றி அவர்கள் அனைவரும் பின்னர் சரணடைந்தனர்.

முன்னாள் அதிபர் எஸ்ராடாவின் அரசில் இளநிலை அமைச்சராக இருந்த ரமோன் கார்டினஸ் என்பவரும் இந்தக் கிளர்ச்சி தொடர்பாகப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

மணிலாவில் கிளர்ச்சியில் ஈடுபட்ட கனரக ஆயுதப் பிரிவைச் சேர்ந்த படையினர் பின்னர் சரணடைந்தனர். அவர்கள் இராணுவ ட்ரக்கில் ஏற்றிச் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்ட காட்சி.

அவரது வீட்டில் இடம்பெற்ற திடீர் தேடுதலின் பின்னர் அனுமதி பெறாத ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டார்.

தற்போதைய அதிபர் குளோரியா அரோயாவை பதவியில் இருந்து அகற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த முயற்சி தோல்வி அடைந்ததை அடுத்து, அதற்குக் காரணமானவர்களை அடையாளம் காண்பதில் அரசு முழு மூசாக இருக்கின்றது என்று செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

இந்த தோல்வியடைந்த கிளர்ச்சியில் ஈடுபட்ட ஒவ்வொருவர் மீதும் நீதியான விசாரணைகள் நடத்தப்படும் என்று அதிபர் குளோரியா உறுதி வழங்கியுள்ளார்.

திங்களன்று பின்னதாக கிளர்ச்சி குறித்து நாடாளுமன்றில் அதிபர் குளோரியா உரையாற்ற இருந்தார். (ம)

சொலமன் தீவில் ஆயுதக் கையளிப்பு!

சொலமன் தீவின் பெரிய தீவிரவாத அமைப்பான 'மலேய்ரா ஸ்கல்' தன் வசம் உள்ள ஆயுதங்களை ஆஸ்திரேலிய அமைதிப் படைகளிடம் முற்றாகக் கையளிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. ஏற்கனவே சில ஆயுதங்கள் கையளிப்பட்டுள்ளன. தமக்கு எதிராகச் செயற்பட்டு வந்த குழுவினர் தமது ஆயுதங்களை ஒப்படைக்க முன்வந்ததை அடுத்துத் தாமும் தமது ஆயுதங்களை ஒப்படைப்பதாக 'மலேய்ரா ஸ்கல்' அமைப்பின் பேச்சாளர் அறிவித்துள்ளார். தீவில் அமைதியை நிலைநாட்டுவதற்காக அங்கு சென்றுள்ள ஆஸ்திரேலியப் படையினர் தலைநகர் வீதிகளில் ரோந்து சுற்றி வருகின்றனர். ஆஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் விரைவில் சொலமன் தீவுகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க சிறைகளில் 21 லட்சம் கைதிகள்!

வாஷிங்ரன்,ஜுலை29

அமெரிக்காவில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதனால், கைது செய்யப்பட்டு சிறைகளின் உள்ளே அடைக்கப்படுவர்களின் எண்ணிக்கையும் இரு மடங்காக அதிகரித்து வருகின்றது.

தற்போது அமெரிக்காவில் உள்ள சிறைகளில் 21 லட்சம் பேர் குற்றச் செயல்களுக்கான தண்டனைக்காக அடைக்கப்பட்டுள்ளனர். உலகின் எந்த ஒரு நாடும் அமெரிக்காவின் சிறைக் கைதிகளின் எண்ணிக்கையைத் தாண்ட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

ஞாயிறன்று வெளியிடப்பட்ட அரச அறிக்கையின்படி கடந்த ஆண்டில் குற்றச் செயல்களுக்காக சிறைகளில் அடைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2001ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. தொடர்ந்தும் இந்த எண்ணிக்கை அதிகரித்து வருவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

1995ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது குற்றவாளிகளாக சிறைகளில் அடைக்கப்படுவோரின் எண்ணிக்கை 6.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

சிறு சிறு குற்றங்களைச் செய்து விட்டு நீதிமன்றினால் தண்டனை பெறும் நபர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

அமெரிக்க அரசு ஏனைய மக்கள் நலத் திட்டங்களுக்கு ஒதுக்கும் நிதி உதவிகளைப் போன்று சிறைக் கைதிகள் தொடர்பான திட்டங்களுக்கு நிதி உதவிகளை வழங்காததே குற்றச் செயல்களின் அதிகரிப்புக்குக் காரணம் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (ம)



அமெரிக்காவின் இந்தியான மாகாணத்தில் உள்ள அதியுயர் பாதுகாப்புடன் கூடிய சிறைச்சாலையின் தோற்றம்.

உலக அரங்கில்

ஸ்பெயினில் குண்டு வெடிப்பு!

மட்றிட்,ஜுலை29

ஸ்பெயினில் வடபகுதியில் உள்ள விமானநிலையம் ஒன்றின் கார் தரிப்பிடத்தில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் வாகனங்கள் சில தீப்பற்றி எரிந்து நாசமாகின. எவருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை.

பிரிவினை கோரிப் போராடி வரும் ஈ.ரி.ஏ அமைப்பைச் சேர்ந்தவர்களே இந்த குண்டுத் தாக்குதலை நடத்தியதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஸ்பெயினில் பிரபலமான ஐந்து நாள் விடுமுறை முடிந்த அடுத்த நாளில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ம)

மத்தியகிழக்கு நாடுகளுக்குச் செல்லும்

பணிப்பெண்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைக்கப்படும்

வேலைவாய்ப்புக்கான இலங்கைக்குழு அறிவிப்பு

கொழும்பு,ஜுலை29

இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்ணாகச் செல்வோரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான இலங்கைக்குழு தீர்மானித்துள்ளது.

பணிப்பெண்ணாகச் செல்வோரின் குடும்பங்களில் ஏற்படும் பலவிதமான பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டும் -

அவர்களின் பிள்ளைகள் கவனிப்பாரற்ற நிலைக்கு உள்ளாக்கப்படுவதைத் தவிர்க்கும் வகையிலுமே- இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குழு மேலும் தெரிவித்திருப்பதாவது:-

மத்திய கிழக்கு நாடுகளில் தற்பொழுது சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தொழில் புரிந்துவருகின்றனர். இவர்களில் 70 சதவீதமானோர் பெண்களாவர். எனவே, இவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதால் இலங்கையர்களுக்கான வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டில் பாதிப்பு ஏற்படமாட்டாது.

இலங்கைப் பெண்கள் வீட்டுப் பணியாளர்களாக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்வதைக் கட்டுப்படுத்துவதால், அங்கு இலங்கைப் பெண்கள் வேண்டத்தகாத பல வன்முறைகளுக்கு உள்ளாவதைத் தடுக்கமுடியும்.

1991ஆம் ஆண்டிலிருந்து இலங்கை முழுவதும் அமைக்கப்பட்ட 22 பயிற்சி நிலையங்களில் வீட்டுப் பணிப்பெண்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே, பணிப்பெண்களாகச் செல்வோரின் எண்ணிக்கையைக் குறைப்பதன்மூலம் இலங்கை தனது கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளமுடியும் - என்றும் அது தெரிவித்துள்ளது.

(எ-10)

ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் நன்மைகளை விளக்கி சுற்றறிக்கை

செயலாளர் பெரேரா விடுத்தார்

வலிகாமம்தெற்கு,ஜுலை29

அரசசேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் மூலம் ஓய்வூதியாகளுக்குக் கிடைக்கக் கூடிய நன்மைகளை விளக்கி அதன் செயலாளர் எம்.பி. பெரேரா அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையைத் தொடர்ந்து, பல பிரதேசமட்ட ஓய்வூதியர் சங்கங்கள் சங்கச் செயற்பாடுகளை துரிதப்படுத்தியுள்ளன.

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் 2000ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி முதல் அரசசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் சட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த பொழுதிலும், அதன் செயற்பாடுகள், நன்மைகள் பற்றிய பூரண விளக்கங்கள் கிடைக்கப்பெறாமையால் பல சங்கங்கள் ஆரம்பநிலையுடன் இதுவரை காலமும் செயற்படாதிருந்து வந்தன.

தற்பொழுது மேற்படி நிதியத்தின செயலாளர் பிரதேச செயலாளர்களுக்கு நிதியத்தின் நன்மைகளை சுற்றறிக்கை மூலம் விளக்கி அவற்றை செயற்பட வைக்குமாறு கோரியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நாட்டிலுள்ள 327 பிரதேச செயலர் பிரிவுகளில் 257 பிரிவுகளில் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

நம்பிக்கை நிதியத்தில் இணைந்து கொண்ட ஒருவர் 24 மாதங்களின் பின் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

உயர்கல்வி பயில்கின்ற அங்கத்தவர் ஒருவரின் ஒரு பிள்ளைக்கு மாதந்திரம் ஆரம்பம் முதல் இறுதி வரை மூன்று ஆண்டுகளுக்கு மாதத்துக்கு 300ரூபா வீதம் புலமைப் பரிசில் கொடுப்பனவு வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின்கீழ் ஆகக் கூடிய கடன்தொகையாக 10ஆயிரம் ரூபாவை ஓர் அங்கத்தவர் பெற்றுக் கொள்ளமுடியும்.

அங்கத்தவர் இறந்தபின், அவரால் செலுத்தப்பட்ட சந்தாப் பணத்தின் பத்துமடங்கு தொகையினை அவரது வாரிசு பெறுகொள்ளமுடியும்-என்று அதில் உள்ளது.

(எ-152)

கொழும்பில் 'பொங்கு தமிழ்' புலிகள் திட்டமிடுகின்றனராம்!

'லங்கா தீப' பத்திரிகையின் தகவல்

யாழ்ப்பாணம்.ஜுலை29

கொழும்பில் பொங்குதமிழ் கலாசார நிகழ்வு ஒன்றினை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாக கொழும்பில் இருந்து வெளியாகும் 'லங்காதீப' சிங்களப் பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

எதிர்வரும் மாதத்தில் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன மண்டபத்தில் இப்பொங்குதமிழ் நிகழ்வு நடைபெறவுள்ளதாகவும், இதற்கான சரியான திகதி குறிக்கப்படவில்லை எனவும், இந்நிகழ்வினை நடத்துவதற்கான நிதியுதவிகளை கொழும்பு வாழ் தமிழ் வர்த்தகர்களிடம் கோரி அதற்கான அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் 'லங்காதீப' தெரிவித்துள்ளது.

பொங்கு தமிழ் நிகழ்வினை கொழும்பில் நடத்துவதன் மூலம் தமது அரசியல் நடவடிக்கைகளுக்கான அலுவலகம் ஒன்றை நிறுவுவதே விடுதலைப் புலிகளின் உள்நோக்கம் எனவும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஐ-8)

உலக சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தின வைபவம் அண்மையில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் யாழ்.பிரிவு படை அத்தியட்சருக்கு சிறந்தசேவையாளர் பாராட்டுப் பத்திரம் வழங்கிய காட்சி. (ஐ-17)

நோர்வே பௌத்த குருமார்கள் இலங்கை நிலை அறிய விஜயம்

கொழும்பு,ஜுலை29

நோர்வேயில் இருந்து பௌத்த மதப் பிரதிநிதிகள் கொழும்புக்கு வருகைதந்துள்ளார்கள். இங்கு பௌத்த மத மற்றும் அரசியல்கட்சித் தலைவர்களைச் சந்திக்கவும் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லவும் அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள்

அரசு - புலிகள் பேச்சுக்கு அனுசரணையாளர்களாக நோர்வே இங்கு பணியாற்றுவது தொடர்பாக மக்களின் கருத்துக்களையும் மற்றும் மதத் தலைவர்களின் கருத்தையும் இவர்கள் அறிந்துகொள்வார்கள்.

தமது விஜயம் தொடர்பாக குழுவின் பிரதிநிதி ஒருவர் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

இலங்கை அரசின் அழைப்பின் பேரிலேயே நாம் இங்கு வந்துள்ளோம். அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நல்லுறவை வளர்ப்பதில் நாம் தொடர்ந்து பணியாற்றுவோம். கத்தோலிக்க மதத்தை இந்நாட்டில் பரப்புவதற்கு நோர்வே அரசு முயற்சிப்பதாகக் கூறுவதில் எவ்வித உண்மையுமில்லை. - இப்படி அவர்கள் தெரிவித்தனர். (ஐ-9)

இளைஞர் படையணி ஆள்சேர்ப்பு குடாநாட்டில் செப்ரெம்பரில்

இலங்கை கொள்கைத் திட்டமிடல் அமைச்சின்கீழ் தேசிய இளைஞர் படையணியின் தொண்டர் படைக்கான ஆள்சேர்ப்பு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் யாழில் நடைபெறவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொண்டர் பணியில் இணைவோர் 18 வயது தொடக்கம் 25 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். அத்துடன், அடிப்படைக் கல்வித் தகைமையாக 8 ஆம் தரத்திற்கு மேல் சித்தியடைந்திருக்கவேண்டும்.

இவ்வாறு தொண்டர் படையில் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுக்கு 18 மாதகால பயிற்சி வழங்கப்படும்.

இந்தப் பயிற்சிகளின்போது கணிதம் மற்றும் ஆங்கிலம், தொழிற்பயிற்சி, சுயதொழில் பயிற்சியும் வழங்கப்படும்.

குடாநாட்டிலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் தலா 250 இளைஞர்கள் இந்தத் தொண்டர்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இவர்களுக்கான பயிற்சிகளை யாழ்ப்பாணத்தில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிகளை வழங்குவதற்கென முதற்கட்டமாக 60 நிலையங்கள் உடன் ஆரம்பிக்கப்படும்.

இந்த நிலையத்தில் ஒன்றை வட்டுக்கோட்டைப் பகுதியில் நிறுவுவதற்குத் தற்போது இடம் ஒன்றைத் தெரிவுசெய்யும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் - என்றார். (எ-11)

புத்தக மலிவு விற்பனை

யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் யாழ். பல்கலைக்கழகத்தில் நூலக கேட்போர் கூடத்திலும், வணிக விரிவுரை மண்டபத்திலும் நடத்தப்படுகின்ற புத்தக மலிவு விற்பனை இன்று 29-07-2003, நாளை 30-07-2003 ஆகிய தினங்களில் **இதுவரை வழங்காத அதிக சலுகை விலையில்,** கடன் அடிப்படையிலும் விற்பனை செய்யப்படவுள்ளது. நூலகங்கள், பாடசாலைகள், பிரதேச சபைகள், வியாபாரிகள், தேவைப்படும் தனிநபர்கள் இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்வனவு செய்யுமாறு வேண்டுகின்றோம். அண்மைக் காலத்து வெளியீடுகள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

குறிப்பு:

கடன் அடிப்படையில் கொள்வனவு செய்ய விரும்புவோர் நிறுவன அதிகாரியின் உறுதிப்படுத்தல் கடிதத்தைக் கொண்டு வருதல் வேண்டும்.

மலிவு விற்பனை 30ஆம் திகதி மட்டுமே இடம்பெறும். மேலதிக நாள்கள் நீடிக்கப்படமாட்டாது.

வணிக மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி-29135)(21-11-15)

கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர்

திரு.க.மோகனதாஸ் ஆசிரியர் அவர்களின் அன்பு மாமியார்

திருமதி பராசக்தி துரைரத்தினம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தோடு நாமும் துயர் பகிர்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

ஆசிரியர்கள்,
கொக்குவில் இந்துக்கல்லூரி.

(20812) (21-29-11-15)

மரண அறிவித்தல்

துவராசா புவனேஸ்வரன்

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த துவராசா புவனேஸ்வரன் 14.07.2003 அன்று பிரான்ஸில் அகாலமரணமானார்.

அன்னார் துவராசா - யோகலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் புவனேஸ்வரி, திருமேனி, திருக்குமார், ஜான்சி, பிரேமினி, இந்துஜா (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகராசா (ஊர்காவற்றுறை பிரதேச சபை), கைலா, சுவர்ணலதா, தவப்புதல்வன் (வடமாகாண தொ.பொ.கமாசம்) ஆகியோரின் மைத்துனரும் பிரகசினியின் சித்தப்பாவும் பிரதீப், டிலானி, நிரோஜ் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2003) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12மு மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (20807) (21-26-11-15)

துயரால்:
துவராசா (தந்தை)



உதயன்

ஆட்சி மாற்றத்துக்காக ஆலாய்ப் பறக்கும் பொ.ஐ.மு.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் சமாதான முயற்சிகள் ஒரு தேக்க நிலையில் - முட்டுக்கட்டை நிலையில் - முடங்கிப் போய்க்கிடக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளாமலேயே புதிய அரசு ஒன்றை அமைக்கும் எத்தனம் குறித்து செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கவிழ்த்து, எப்படியும், ஆட்சிக்கட்டைப்பிடிக்க வேண்டும் என்று துடியாய்த் துடிக்கிறது பிரதான எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி. அதற்காக எந்தத் தரப்புடனும் கூட்டுச் சேரவும் தயாராக இருக்கிறது அது.

ஆட்சியைப் பிடிக்கும் அவா காரணமாக, முதலில் பேரினவாதம் பேசும் ஜே.வி.பியுடன் அணிசேர பொ.ஐ.முன்னணி முயன்றது.

ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வதற்காக அதன் பேரினவாதப் பல்லவியைத் தானும் வரித்துக் கொள்ளவும் பொ.ஐ.மு. தயாராகியது.

பிரதமர் ரணிலின் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்ற விடாப்பிடி நிலைக்காக ஜே.வி.பியுடன் சேர்ந்து இனவாதக் கூச்சலுக்கு 'ஒத்து ஊதவும்' பொ.ஐ.முன்னணியின் முத்த தலைவர்கள் சிலர் முன்வந்தனர்.

ஆனால், உத்தேச கூட்டணிக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதில் எழுந்த போட்டி, கூட்டு உருவாக முன்னரே அதற்கு வேட்டு வைத்துவிட்டது.

உத்தேச கூட்டணியின் பொதுச் செயலாளர் பதவி தமக்குத் தரப்பட வேண்டும் என்றும், கூட்டணியில் முப்பது எம்.பிக்களின் இடம் தங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றும் ஜே.வி.பி. வற்புறுத்தியது. ஆனால், கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் பதவியை ஜே.வி.பியிடம் கொடுத்தால், கூட்டமைப்பின் குடுமியை அவர்களுக்கு பிடியாகக் கொடுத்ததாகி விடும் என்ற உண்மை பொ.ஐ.மு. தலைவர்களுக்கு உறைத்ததால், இன்று உத்தேச கூட்டு விரிசல் கண்டுபோய் நிற்கின்றது.

இருதரப்புக்குமிடையில் கூட்டமைப்பு ஏற்படுத்தும் முயற்சி 'சாண் ஏற முழம் சறுக்கும்' கதையாகக் காலத்தை இழுத்தடிக்கின்றது. இந்தநிலையில், ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிக் காலத்துக்குள் - அந்தப் பதவி தரும் அதிகாரத்தைப் பயன்படுத்தி - ஐ.தே.மு. அரசைக் கவிழ்த்து விட வேண்டும் என்று அவசரப்படும் பொ.ஐ.முன்னணியினரால் காத்திருக்க முடியவில்லை.

எனவே, ஜே.வி.பியைக் கைவிட்டு வேறு மார்க்கத்தில் விரைந்து ஆட்சியைப் பிடிக்க அவர்கள் முயல்கின்றனர். அதன் ஒரு கட்டமே பிரதமர் ரணிலைப் பதவி நீக்கம் செய்துவிட்டு - ஐ.தே.முன்னணிக்குள் இருக்கும் அதிருப்தியாளர்களைக் கூட்டுச் சேர்த்து - 'தேசிய அரசு' என்ற போர்வையில் ஓர் அரசை ஏற்படுத்தும் முயற்சியாகும்.

ஐ.தே.முன்னணி அரசிலும் ஐ.தே.கட்சியிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அடுத்ததாக முத்த தலைவர்களின் வரிசையில் முன்னணியில் இருப்பவர் அமைச்சர் கருஜயசூரிய. அவரையும் அவரது மருமகனும் ஐ.தே.கட்சியின் முன்னாள் முத்த தலைவரான காமினி திஸநாயக்காவின் புதல்வருமான நவீன திஸநாயக்காவையும் மற்றும் அவர்களுக்கு ஆதரவான ஒரு சில ஐ.தே.முன்னணியினரையும் 'வளைத்துப் போடுவதன்' மூலம் தமது இந்தத் திட்டத்தை நிறைவேற்றி விடலாம் என்று பொ.ஐ.முன்னணியின் முத்த தலைவர்கள் சிலர் கணக்குப் போடுகின்றனர்' என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டையே உலுக்கும் தேசியப் பிரச்சினையான இனப்பூசலுக்கு, சமாதானத் தீர்வு காணும் முயற்சியில் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய ஓர் இக்கட்டானநிலையில் நாடு இருக்கின்றது. இந்நிலையில் ஒரு சில அரசியல் வாதிகளை வளைத்துப் போடுவதன் மூலம் ஆட்சியைப் பிடிக்கும் குறுகிய அரசியல் லாப எத்தனம் வெற்றி பெறுமானால், அமைதித் தீர்வு காணும் முயற்சிகள் கேள்விக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் பதவி ஆசையைக் கைவிட்டு, முழு நாட்டினதும் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு செயற்படுவதே அரசியல்வாதிகளுக்கு நல்லது.

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் பத்மநாதன் நினைவு நிகழ்வுகள்

நாளை புதன்கிழமை நடைபெறும்

அரியாலை,ஜூலை29

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் அமரர் கலாஞ்சி என்கேபத்மநாதனின் அஞ்சலி நிகழ்வுகள் நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு மன்றத்தின் கலாமண்டபத்தில் நடைபெறும்.

மன்றத்தின் தலைவர் கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில இந்த நிகழ்வு நடைபெறும்.

நிகழ்வில் இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ மகாதேவக்குருக்கள் தலைமையில் வேதபாராயணம் இடம்பெறும்.

கலாபூஷணம் எஸ்.ஆர்.திரு ஞானசம்பந்தன் தமிழ் மறையையும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், அருட்கவி சீ.வினாசித்தம்பி ஆகியோர் அருளுரைகளையும் நிகழ்த்துவர்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை, இந்துகலாசார அமைச்சின் ட்ரஸ்ட் உதவிச் செயலாளர் து.வைத்திலிங்கம், பேராசிரியர் சண்முகதாஸ், மகாவித்துவான் ந.வீரமணிஐயர், கலைஞான கேசரி க.சோமசுந்தரம், கலாபூஷணம் கே.ஆர்.சுந்தரமூர்த்தி, செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்துவர்.

சங்கீத பூஷணம் எஸ்.கணபதிப்பிள்ளை பாமாலை வாசிப்பார்.

தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெறும். (எ-17)

நாட்டு நடப்பு

வாழ்க நாட்டுப்பற்று!

ஏறியே "பிளேனில்" வந்து
இறங்கிய உடனே அன்னார்
"காரினைப் பிடித்துக் கொண்டு"
காணிக் கந்தோருக்குச் சென்று
உறுதிகள் விவரம் காட்டி
உடன் ஒரு கொப்பி பெற்று
கூறிடும் விலைக்குச் சற்றும்
குறைவின்றி காணி விற்று
ஆறிரு நாட்கட் குள்ளே
அனைத்தையும் சுறுட்டிக் கொண்டு
தேறிடும் பணத்தினோடு
திரும்பியே இலண்டன் சென்று
உறுதியால் காணி விற்றோர்
உடன் அங்கு மேடையேறி
வறுமையால் வாடினோர்க்கு
வாழ்வளித்தோம் என்கிறாரே!
உறுதியாய் நாட்டுப் பற்றுடைய
உத்தமர் இவரே அன்றோ!

- விகடகவி.

யாழ்.செயலகத்துக்கு முன்பாக இருந்து

பிறப்பு, இறப்பு படிவம் நிரப்பும் தரகர்களை வெளியேற்றி உதவுக!

அரச அதிபர் பொலீஸாரிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை29

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு முன்பாக - பிரதான வாசல் பகுதியில் அமர்ந்து விவாக, பிறப்பு, இறப்பு விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்யும் தரகர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.அரச அதிபர் செபத்மநாதன் யாழ்.பொலீஸாரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கண்டி வீதியோரமாக இருக்கும் தரகர்கள் விவாக, பிறப்பு, இறப்புப் பத்திரங்களைப் பெறுவதற்காக செயலகத்துக்கு வருபவர்களின் விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து கொடுப்பதில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கென கணிசமான தொகைக் கட்டணத்தையும் தரகர்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து கொடுக்கும் தரகர்கள், விண்ணப்பங்களைத் தாமே பொறுப்பேற்பதுடன் சான்றிதழ்களை மிகவிரைவில் அனுப்பிவைப்பதாகக் கூறி அதற்கென விசேட கட்டணத்தையும் அறவிடுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

தரகர்களாகச் செயற்படுவோரில் பலர் நன்றாக எழுத, வாசிக்கத் தெரியாதவர்களாக உள்ளனர். இதனால் அவர்களால் பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பங்களை விளங்கிக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அத்துடன், பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றுபவர்களில் தரகர்களின் நடவடிக்கைகளுக்குத் தடையாக உள்ள ஊழியர்கள் செயலகத்துக்கு வெளியில் தரகர்களால் மிரட்டப்பட்டுள்ளனர். அத்துடன், குறிப்பிட்ட ஊழியர்களின் வாகனங்களை சேதப்படுத்துவதிலும் தரகர்கள் ஈடுபட்டுள்ளனர். என எனக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இது குறித்து விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கவும் - என்று அதில் உள்ளது. (எ-8)

போக்குவரத்துக்கு இடையூறு என்று கூறி

சைக்கிள் ரயரின் 'வால்பு'களை கழற்றியெடுத்த பொலீஸார்

யாழ்.நகரப்பகுதியில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை29

யாழ்ப்பாணம் நவீன சந்தைக்கு அருகில் கஸ்தூரியார் வீதியின் இரு பக்கங்களிலும் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள்களின் 'வால்புகள்' பொலீஸாரால் கழற்றப்பட்டன.

நேற்றுக்காலை யாழ். மின்சார நிலைய வீதிச்சந்திக்கும் - ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கும் இடையிலான நவீனசந்தைப் பகுதியில் - கஸ்தூரியார் வீதியில் பெரும் எண்ணிக்கையான சைக்கிள்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நிறுத்தப்பட்டிருந்தன.

போக்குவரத்து விதிகளுக்கு முரணாக சைக்கிள்கள் நிறுத்தப்பட்டிருப்பதை அவதானித்த பொலீஸார் அவற்றின் 'வால்புகளைக்' கழற்றிவிட்டனர் எனக் கூறப்பட்டது.

சிலமணி நேரம் கழித்து தமது சைக்கிள்களை மீள எடுத்துச் செல்லவந்தோர் சைக்கிள்களின் 'வால்புகள்' கழற்றப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இதேநேரம், அப்பகுதியில் வீதிக்கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலீஸார் சம்பந்தபட்டோரை அழைத்து, வீதியோரங்களில் சைக்கிள்களை நிறுத்துவதால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றிக் கூறியதுடன், தம்மால் கழற்றப்பட்ட 'வால்புகளை' உரியவர்களிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை, யாழ். கஸ்தூரியார் வீதியை நகரப்பகுதியில் ஒரு வழிப்பாதையாகப் பயன்படுத்துமாறு அறிவுறுத்திவந்த பொலீஸார், அதனை மீறுவோர் மீது நடவடிக்கை எடுத்தும் வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாகவே நேற்று வீதியோரங்களில் சைக்கிள்களை நிறுத்தியோர் மீதும் நடவடிக்கை எடுத்தனர் எனக் கூறப்பட்டது. (எ-10-ரி)

நாளை

ஆடி 14
புதன்கிழமை
(30.07.2003)
திதி : பிரதமை
பிற்பகல் 12.33 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
முன்னிரவு 10.28 வரை
சுபநேரம்: 4.33 - 6.03
ராகுகாலம்: 12.03 - 1.33
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

உன்னை மட்டுமே நீ நேசித்தால் அனைவராலும் வெறுக்கப்படுவாய்.

மாணவியை பின் தொடர்ந்தவர் கலாசாரத்தைப் பேணுவோரிடம்

வட்டுக்கோட்டையில் ஞாயிறன்று சிக்கினார்

வட்டுக்கோட்டை,ஜூலை29

நீண்டநாள்களாக மாணவி ஒருவருக்கு தொல்லை கொடுத்து வந்த இளைஞர் மடக்கிப் பிடிக்கப்பட்டு கலாசாரம் பேணும் இளைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டார்.

வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

வட்டுக்கோட்டை - மூளாய் வீதியில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் கல்விகற்று வரும் மாணவி ஒருவரை பின் தொடரும் இளைஞர் ஒருவர் தொல்லை கொடுத்து வந்துள்ளார். இதனையறிந்த கல்வி நிலைய மாணவர்களும் அப்பகுதி மக்களும் இணைந்து பிரஸ்தாப இளைஞரை நேற்று முன்தினம் மடக்கிப்பிடித்து கலாசாரம் பேணுவோரிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை - இச்சம்பவம் இடம்பெறுவதற்கு சிலமணி நேரத்துக்கு முன்பாக மேற்படி கல்வி நிலையத்தில் வைத்து வேறு ஒரு மாணவியைத் தாக்க முயன்றதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் கல்வி நிலைய நிர்வாகியாலும் மாணவர்களாலும் பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்றும் - கூறப்பட்டது. (எ-10-161)

உள்ளூராட்சி உதவியாளருக்கு விரைவில் தனியான சேவை

மாகாண ஆணையாளர் உறுதிமொழி

யாழ்ப்பாணம்,ஜூலை29

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி உதவியாளர்களுக்கென பிறிதொரு சேவை உருவாக்கப்படும்.

- இவ்வாறு கொள்கையளவில் உறுதியளித்துள்ளார் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 'அபிவிருத்தி அலுவலர் சேவை' என்ற புதிய சேவை ஒன்றை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் திருகோணமலையில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே உள்ளூராட்சி ஆணையாளர் இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட உள்ளூராட்சி உதவியாளர்கள் உள்ளூராட்சி ஆணையாளரிடம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

★ உள்ளூராட்சி உதவியாளர்களை இணைந்த சேவைக்குள் உள்வாங்கக்கூடாது. அவர்கள் தொடர்ந்தும் உள்ளூராட்சி மன்றத்துக்குள்ளேயே சேவையாற்றவேண்டும்.

★ உள்ளூராட்சி உதவியாளர்கள் அனைவரையும் கொண்ட புதிய உள்ளூராட்சிச் சேவை உருவாக்கப்படவேண்டும்.

★ உள்ளூராட்சி உதவியாளர்களது பதவி பெயர்மாற்றம் செய்யப்பட்டு, 'உள்ளூராட்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்' என்ற பெயர் வழங்கப்படுதல் வேண்டும்.

★ புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யும்போது பட்டதாரிகளை மட்டுமே உள்வாங்கவேண்டும்.

★ ஏற்கனவே வழங்கப்பட்ட கடமைப்பட்டியல்களில் குறைப்புச் செய்யப்படக்கூடாது.

★ வேதன அளவுத் திட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும் - என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மேற்படி விடயங்கள் தொடர்பாக மாகாண பிரதம செயலாளர், மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஆகியோரின் அனுமதிபெற்று இதுகுறித்து விரைவில் பதிலளிப்பதாக உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களிடம் தெரிவித்தார். (எ-185)

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

29-07-2003

HAPPY BIRTHDAY

செல்வி சா.லவீனியா

ஹொலண்டில் வசிக்கும் நீர்வேலி வடக்கு,
மாதா கோயிலடியைச் சேர்ந்தவர்களான
திரு.திருமதி சாள்ஸ் ஜோசப் (கிறிஸ்ரி) சாந்தி
தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி லவீனியா

அவர்கள் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (29.07.2003) செவ்வாய்க்கிழமை நீர்வேலி வடக்கில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

செல்வி லவீனியாவை அப்பா, அம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர் அனைவரும் நீர்வேலி பரலோக அன்னையின் அருள்பெற்று அவரின் நல்லாசியோடு நலமுடன் நீடூழி வாழ வேண்டுமென்று அன்போடு வாழ்த்துகின்றார்கள்.

திரு.சாள்ஸ் ஜோசப் (கிறிஸ்ரி - அப்பா)
திருமதி சாந்தி (அம்மா)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (20789) (21-11-19)

அந்தியேட்டி அழைப்பு

மண்ணுலகில் 17 - 04 - 1961

விண்ணுலகில் 29 - 06 - 2003

திருமதி மதனமோகன் ஜெயலட்சுமி (வனிதா)

இல்லத்தின் அறம் காக்கு ஒளிர்ந்த தெய்வம்
இல்லறத்தில் இணைந்திட்ட கணவன் கதறிட
இல்லறத்தின் விளைமுத்தான பச்சிளங்குழந்தைகள் வாய்விட்டலறிட
உற்றவரும் மற்றவரும் துயரத்தில் மூழ்கிட விண்ணுலகு
விரைந்ததேனோ?

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 29-06-2003 அன்று ஓமானில் காலமானவருமாகிய திருமதி மதனமோகன் ஜெயலட்சுமி (வனிதா) அவர்களின் ஆத்மசாந்திக்காக இன்று (29-07-2003) செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு நடைபெறும் சம்பியேட்டிக்கிரியைகளிலும் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உறவுகள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மு.மதனமோகன் - கணவர்
ம.லவீனி, ம.கஸ்தூரி (மகள்மார்)
செ.மகேஸ்வரி - தாய்
தி.செல்வைகாலட்சுமி (பேபி - சகோதரி)
சி.பிரியம் (கணேஸ்) - மைத்துனர்
மற்றும் குடும்பத்தினர்.

கோணாவளை,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி. (20644) (14-21-19)

31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 05 - 02 - 1949

மறைவு 29 - 06 - 2003

அமரர் சின்னப்பொடி கதிரவேலு

அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்கள்
நினைவு எங்கள் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்!
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்,
பிள்ளைகள்:
மதி, கவி, பேரழகன்.

கன்பொல்லை வீதி,
கரவெட்டி. (20760) (21-26-11)

அஹிம்சை தோற்றதாலேயே ஆயுதப் போர் முகிழ்த்தது!

பாடசாலை விழாவில் மாவை சேனாதிராஜா

கொக்குவில்,ஜூலை29

அஹிம்சைப் போராட்டங்களின் மூலம் நாம் கேட்ட உரிமைகளை சிங்களத் தலைமைகள் தர மறுத்தமையே ஆயுதப் போராட்டத்துக்கு வித்திட்டது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிபர் எஸ்.செல்வராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சில் ஈடுபட முன்வந்தமைக்குப் பிரதான காரணமே புலிகளின் ஆயுத பலமாகும். நாமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி தமிழ மக்களின் ஏக பிரதிநிதிகள் புலிகள் தான் என்று கடந்த பொதுத்தேர்தலின போது சர்வதேச சமூகத்துக்கும் பொது மக்களுக்கும் எடுத்துரைத்தோம்.

தந்தை செல்வா அஹிம்சை வழியின்மூலம் அன்று பல போராட்டங்களை முன்னெடுத்தபோதும் அதற்குப் பலன்ஏதும் கிடைக்கவில்லை. இதனை உணர்ந்த தந்தைசெல்வா, எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் போராடவேண்டிய கட்டம் வந்துவிட்டது என்றார். இதனை ஒவ்வொரு தமிழ் மகனும் அறிந்துகொள்ள வேண்டும்.

கடந்தகால யுத்த சூழ்நிலையில் இருந்து நாம் முற்றாக விடுபடாத நிலையிலும்கூட எமது மாணவர்கள் கல்வியிலும் சரி, விளையாட்டிலும் சரி பல சாதனைகளை நிலைநாட்டி வருகின்றனர். இதனையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனாலும் கல்வித்தரத்தில் நாம் கடந்த காலங்களைவிட இப்பொழுது பின் தங்கியுள்ளோம். இந்நிலைமாறி மீண்டும் பழைய நிலைக்கு எமது இனம் வரவேண்டும் - என்றார் மாவை. (ஜ-10-76)

சுயதொழில் விருத்திக்கு ஒருலட்சம் நிதியுதவி

வலி.தெற்கு,ஜூலை29

கடந்தகாலயுத்த நடவடிக்கைகள் காரணமாக கணவனை இழந்து வாழும் ஆனைக்கோட்டை - சாவற்கட்டு பகுதி விதவைக் குடும்பங்களின் நலன்கருதி இந்துகலாசார அமைச்சு ஒருலட்சம் ரூபா நிதியுதவியினை வழங்கியுள்ளது.

இந்நிதியைக் கொண்டு விதவைக் குடும்பங்கள் சுயதொழில் வாய்ப்பினைப் பெற்று, தமது வாழ்க்கை வருமானத்தை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-152)

இரும்புக்கதவு நள்ளிரவில் திருட்டு

வளவிற்குப் போடப்பட்டிருந்த இரும்புக்கதவு நள்ளிரவு நேரம் திருடர்களினால் அறுத்து எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. நல்லூர் சங்கிலியன் வீதிக்கு முன்புறம் உள்ள ஒழுங்கையில் உள்ள வளவின் கதவே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. (எ-86)

மின் இணைப்பு வேலைகள் ஆரம்பம்!

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இருந்து வீளான் சந்தி வரையான பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்காக பிரதான மின்வயர்கள் இணைக்கும் நடவடிக்கையில் மின்சாரசபை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் இந்தப் பகுதியில் உள்ள வீடுகளுக்கு மின்விநியோகம் வழங்குவதற்கு வசதியாக மின்மாற்றிகள் திறந்து வைக்கப்பட்டமை தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்தே இப்பகுதிகளில் மின்விநியோகத்தை மேற்கொள்வதற்காக தூண்கள் நிறுத்தி வயர்கள் இணைக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் மீளக்குடியமர்ந்து நான்கு வருடங்களுக்கு மேலாகிய நிலையில் தற்பொழுதே மின் இணைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-86)

பனையில் ஊழியருக்கு புதிய சம்பளம்

பச்சிலைப்பள்ளி பல நோக்கு சங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இந்த மாதம் தொடக்கம் புதிய சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் சம்பளம் வழங்கப்படவுள்ளது. (எ-117)

வேலைக்கு ஆள் தேவை

(சீவல்டிங் வேலை தெரிந்தவர்களும் அதற்கு உதவியாள்களும் தேவை.
நேரில் வரவும்.

M.T.K. WORK SHOP
40, றக்கா றோட்,
(I.C.R.C அருகு முன்பாக)
யாழ்ப்பாணம்.
(20797)

இணையத்தளம்

உங்கள் கதைகள், கவிதைகள், கட்டுரைகளை இணையத்தில் பாதுகாத்துக் கொள்ள YARL.Com (தமிழ் வெப்தளம்).
தொடர்புகளுக்கு:
YARL.Com, RAUKENDVEI 50 (EILS)
1266, OSLO,
NORWAY.

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

29-07-2003

HAPPY BIRTHDAY

உடுப்பிட்டியைச் சேர்ந்த
அனுஷ்காந்த் - சுபத்திரா தம்பதிகளின்
செல்வப் புதல்வி

வைஷ்ணவி (திவ்யா)

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (29.07.2003) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார் வைஷ்ணவியை அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அத்தையார், மாமாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், பாட்டா, பாட்டிமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் வல்லைவாணி பிள்ளையார் அருள்பெற்று சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

சந்தை வீதி,
இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. (20597)

த. அபூர்வசிங்கம்
(அப்பப்பா)

இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், வீரியமாகும் உங்கள் சக்தியைவிரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் கூடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

★ 100% இளமையையும் வலிமையையும் தரும்!

சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

யாழ்குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED BY:
SITHARA PRODUCTS,
PUTTALAM ROAD.
CHILLAW.
(REG.NO: 6382) AR/PR/No. 228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சீவா நறுமணப் பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். TP-222 2567.

உ

வேலணை பெருங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய

சுபானு வருஷ- 2003

மஹோற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியார்களே!

ஆலய வருடாந்த மஹோற்சவம்
எதிர்வரும் 01.08.2003 வெள்ளிக்கிழமை
கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

கொடியேற்றம்:	01.08.2003 வெள்ளிக்கிழமை பகல் 10 மணி
தீ மிதிப்பு திருவிழா:	08.08.2003 வெள்ளிக்கிழமை
சப்பறத்திருவிழா:	09.08.2003 சனிக்கிழமை
தேர்த்திருவிழா:	10.08.2003 ஞாயிற்றுக்கிழமை தேரில் சுவாமி எழுந்தருளல் காலை 9மணி
தீர்த்தம்:	11.08.2003 திங்கட்கிழமை
பூங்காவனம்:	12.08.2003 செவ்வாய்க்கிழமை

உற்சவ காலங்களில் அன்னதானம் வழங்க அன்னதான சபையினர் ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

வேலணை. (20732) (21-26-11-19) - பரிபாலனசபையினர்.

மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை இடம்பெற்றால் தனித் தமிழீழம் உருவாவது இலகுவாகும்

"நிசரணி குணசேகர" என்பவர் தென்னிலங்கை ஊடகவியலாளர். அண்மையில் நினைவுகூரப்பட்ட 1983 ஆம் ஆண்டின கறுப்பு ஜூலை சம்பவத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு குறித்து, "குற்றமும் தண்டனையும்" என்ற தலைப்பில் 'லங்காதீப' நாளிதழில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்களின் தொகுப்பை வாசகர்களுக்குத் தருகிறோம்.

1983 ஜூலை மாதத்தில் இந்நாட்டில் இனக்கலவரமொன்று இடம்பெறாதிருந்திருந்தால், விடுதலைப் புலிகள் அமைப்பு இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தது போன்று சிறியதொரு ஆயுதம் தாங்கிய போராட்டக் குழுவாகவே இன்றும் இயங்கியிருக்கும்.

மற்றைய 'கெரில்லாக்' குழுக்களை விட விடுதலைப் புலிகள் அமைப்பு யுத்த நடவடிக்கைகளில் திறன்படைத்தவர்கள் என்பது உண்மையே. ஆயினும், விடுதலைப் புலிகள் அமைப்புப் போன்றே புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற ஏனைய முக்கிய தமிழ்க்கெரில்லா அமைப்புகளும் தம்மிடையே ஓரளவு குறைந்த அல்லது கூடிய விதத்தில் சமநிலை கொண்டவையாக விளங்கிவந்தன.

புதிய ஸ்ரீலங்காவின் வரலாற்றில் சோறூபூசிய சம்பவமான 1983 ஜூலைக் கலவரத்தை அடுத்து இந்நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது.

பொதுவாக சகல தமிழ்ப் போராட்ட அமைப்புகளுக்கும் இந்த ஜூலைக் கலவரம் சாதகமான வாய்ப்பளித்த சந்தர்ப்பமாக அமைந்தது. இந்த ஜூலைக் கலவரம் காரணமாக இச்சகல அமைப்புக்களது உறுப்பினர்களின் எண்ணிக்கை, யுத்தத்தின்பாலான ஈடுபாடு மற்றும் சர்வதேச நாடுகளினுடனான நெருக்கம் ஆகிய விடயங்களில் கிரமமான அதிகரிப்பு ஏற்படலாயிற்று. இந்த ஜூலைக் கலவரத்தை அடுத்து இந்திய நாட்டின் அபரிமித ஆதரவும் சர்வதேச சமூகத்தின் அனுதாபமும் இத்தமிழ்க் குழுக்களுக்குக் கிடைக்கப் பெற்றன. தென்பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்களின் வீடு வாசல்கள், உடைமைகள் தீமூட்டி எரிக்கப்பட்டமையால் நாட்டை விட்டு வெளியேறிச் சென்று வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்களில பெரும்பாலானோர் ஆயுதப் போராட்டத்துக்குப் பல வழிகளில் செய்த பங்களிப்பு பலம்வாய்ந்த சர்வதேச தமிழர் இணைப்பு ஒன்று (Tamil Diaspora) உருவாக்குவதற்கு மூல காரணமாயிற்று.

பிரிவினைவாதப் போராட்டத்துக்குப் புதுப்பாதை அமைத்து புத்துயிரளித்தது இந்த ஜூலைக் கலவரமேயாகும். பிரபாகரனின் நெருங்கிய சகாக்களில் ஒருவரான சார்ள்ஸ் அன்ரனியை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொலை செய்தமைக்குப் பழிதீர்க்கும் வகையில் விடுதலைப் புலிகள் அமைப்பால் ஸ்ரீலங்கா இராணுவத்தின் 13 வீரர்கள் ஒரே தருணத்தில் கொல்லப்பட்டனர். நாட்டின் அப்போதைய பிரதமர் மற்றும் கொழும்பு நகர மேயர் ஆகியோரது எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அந்த 13 இராணுவ வீரர்களது சடலங்களையும் கொழும்புக்கு எடுத்துச் செல்வதற்கு நாட்டின் அப்போதைய ஜனாதிபதி முடிவு செய்தார். விடுதலைப் புலிகள் மீதான நியாயமான எதிர்ப்பு உணர்வை நியாயமற்ற வகையில் தமிழ் பொதுமக்களுக்கு எதிரான எதிர்ப்பாக மாற்றி விடுவதற்கான தகுந்த தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த சிங்கள இனவாதக் குழுக்களுக்கு ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனாவின் இக்கபடத்தனமான முடிவு வழிசமைத்துக் கொடுத்தது.

தாம் தமிழர்கள் என்ற ஒரு காரணத்தால் மட்டும் தாக்குதல்களுக்கு உள்ளான தமிழ் இனத்தவர்களின் மனதில் தங்களை தாக்கிய சிங்கள இனவாதிகள் தொடர்பாக மட்டுமன்றி, அவ்வகை தாக்குதல்களை மேற்கொள்வதற்கு அவ்வினவாதிகளுக்கு இடமளித்த முழுச்சிங்கள சமூகத்தினர் மீதும் விரோத மனப்பான்மை உருவாவது புதுமையானதொன்றல்ல.

அதேபோன்று தென்பகுதி சாதாரண சிங்கள மக்கள் பிரிவினை கூறும் தமிழ்த் தரப்பினர்களுடன் சகோதரத்துவ உறவைப் பேணிவளர்க்க வேண்டும் என்ற கருத்துக் கொண்டிருந்த தமிழ் இடதுசாரி அமைப்புகளுக்கு மட்டுமல்ல, கடும் கோட்பாடு கொண்ட விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இந்நிலைமை பெரும் சாதகமாக அமைந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பினரால் சமமான நிலையில் வைத்துக் கருதப்பட்டு வந்த மற்றைய ஆயுதம் தாங்கிய குழுக்களைப் பின்தள்ளி தாம் முன்னணிக்கு வரமுடிந்தது. இன்று நாம் துன்பம் உறுவதற்கு காரணம், அன்று நாம் (சிங்களவர்கள்) மேற்கொண்ட பழி பாவமிக்க அநியாய நடவடிக்கைகளின பிரதிபலனேயாகும்.

தமது யுத்த ரீதியான தாக்குதல் நடவடிக்கைகள் மூலம் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களை முற்றுமுழுதாகக் கைப்பற்றிக் கொள்ளக்கூடிய பலம் முன்னெப்போதும் இல்லாத வகையில் இன்று விடுதலைப் புலிகள் அமைப்பிடம் நிறைந்து காணப்படுகிறது. இத்தகைய நிலை ஒன்றினை உருவாக்குவதில் பெரும் பங்களிப்பை வழங்கியது (தற்போதும் வழங்கி வருவது) 1983 ஜூலை கலவரமே ஆகும். இக்கலவரத்தின் போது தமிழர்களின தொழிற்சாலைகளையும் கடைகளையும் தீமூட்டி எரித்ததன் மூலம் "சிங்களவர் அல்லாத வர்த்தகர்களுக்கு" ஏற்படுத்தப்பட்ட இழப்புகளை உதாசீனப்படுத்தி சிங்கள சமூகத்தைச் சேர்ந்த வர்த்தகர்களின் சேதமடைந்த வியாபார நிலையங்களுக்கு நஷ்டஈடு வழங்கியதன் மூலம் கைக்கொண்ட ஜாதிபேதத்தை பாராட்டும் வகையில் வெளியிட்ட முரண்பாடான வசனங்களால் மேலெழுந்த வகையில் ஜூலைக் கலவரத்தை நியாயப்படுத்திக்காட்ட உற்சாகம் எடுத்தவர்கள் இந்த ஐ.தே.கட்சியினரே என்பது பூரணமான வரலாற்று வேடிக்கையாகும்.

இன்று தமக்கு சர்வதேச சமூகத்தின் பெரிய அளவிலான அங்கீகாரம் கிட்டாமையையே விடுதலைப் புலிகள் தமது முக்கியமான பின்னடைவாகக் கருதுகின்றன். தற்போது பேச்சுக்களும் வெற்றிகரமாக அமையாது போகுமானால் விடுதலைப் புலிகள் அமைப்பினரால் தமிழீழம் உருவாக்கப்படுவது தவிர்க்க முடியாததொன்றாகிவிடும். தமது இத்தேவையை நிறைவேற்றிக்கொள்ள சிங்கள இனவாத பிரிவினரின் பக்க உதவியை விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமைத்துவம் எதிர்பார்ப்பதாகக் கருதினால் அது வெறும் ஊகம் அல்ல.

1983 ஜூலைக் கலவரம் விடுதலைப் புலிகள் அமைப்பின் வளர்சிக்கும் அபிவிருத்திக்கும் வழங்கிய பங்களிப்பின் பெறுமதியை இத்தருணத்தில் கூட தென்பகுதி இனவாத பிரிவுகளால் புரிந்துகொள்ளமுடியாது உள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பின தலைமைத்துவம் அதனை நன்கு உணர்ந்துள்ளது. தென்பகுதியினர் மீண்டுமொரு தடவை சிறுபான்மை இனத்தவர் மற்றும் பிறமதப்பிரிவினர் மீது தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவர்களேயானால் அதன் மூலம் சிறந்த பயன் அடையப் போவது விடுதலைப் புலிகள் அமைப்பேயாகும். ஏனெனில், அதன் மூலம் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களின் வடுக்களைப் போக்கிக் கொள்வதற்கு விடுதலைப் புலிகள் அமைப்பு அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு இடமளிப்பதாக அமையும். அவ்வாறான சிக்கல் நிலையொன்று உருவாகுமிடத்து, இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தினருக்கு பௌத்த சிங்களவர்களைக் கொடுமைக்காரர்கள் என்ற விதத்தில் சித்திரித்துக் காட்டுவதனூடாக தாம் சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தைத் திரட்டிக் கொள்வதற்கும், தமிழ் மக்களின் பாதுகாப்புக்கெனத் தனியான அரசொன்று நிறுவப்பட வேண்டியது அவசியமென்ற கருத்தை முழு உலகமும் ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு சூழ்நிலையை உருவாக்கவும் கூடிய சந்தர்ப்பம் விடுதலைப் புலிகள் அமைப்புக்குக் கிட்ட இடமுண்டு.

இன்று எமது (சிங்களவரது) சமூகத்தில் ஒரு சில பிரிவினரால் முன்னெடுக்கப்படும் சிறுபான்மை இனவிரோதம் மற்றும் பிறமதப் பிரிவினருக்கெதிரான விரோத பிரசாரங்கள் கவலையளிக்கத்தக்க விடயங்களாகும். இற்றைக்கு இரு பது வருடங்களுக்கு முன்னர் எமது சமூகத்தின் ஒரு பிரிவினர் மேற்கொண்ட அப்பெரிய மடத்தனமான தவறுக்கு நாம் தற்போதும் நஷ்டஈடு செலுத்தியவாறுள்ளோம்.

1983 ஜூலையில் நாம் மேற்கொண்ட தவறான நடவடிக்கை போன்று மீண்டுமொரு தடவை மேற்கொள்வோமாயின் எமது சமூகம், எமது நாடு என்பன குறித்து கவலைப்பட வேண்டிய விதத்தில் நாம் அடையப் போகும் தண்டனை முன்னையதை விட இத்தடவை பாரதூரமானதும் உறுதிமிக்கதாயும் அமையும். ஒருபுறம், விடுதலைப் புலிகள் நாட்டைப் பிரித்தெடுத்துத் தமிழீழம் உருவாக்கக் காரணமாவதுடன், அதற்கு அவசியமான சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் காரணமாக அமையக்கூடும். அதேவேளை, மற்றொருபுறம் சர்வதேச சமூகம் ஸ்ரீலங்காவை "தோல்வியுற்ற அரசு" (Failed State) என்ற வகையில் கருதவும் அதன்மூலம் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் எம்மை ஓரங்கட்டிவிடக் காரணமாயும் அமையும். உதாரணமாக, 1983ஜூலை இனக் கலவரம் போன்றதொரு சம்பவம் மீண்டுமொரு தடவை இடம் பெறுமானால் எமது நாட்டுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் மற்றும் வெளிநாடுகளால் எமது நாட்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்படும் முதலீடுகள் ஆகியன முற்று முழுதான வகையில் நிறுத்தப்பட்டுவிடும். பெறுமதி சேர்வி வரிப்பு (வற்வரி) முறை மூலம் எதிர்பார்த்த வருமானம் பெற்றுக் கொள்ள முடியாமையால் இன்று வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழும் நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்ய வழிதெரியாது கடும் சிக்கல் நிலைமையொன்றுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையில் நாட்டை நிர்வகிக்கும் அரசு தடுமாறுகிறது. மீண்டும் தென்பகுதியில் 83ஜூலை போன்றதொரு குழப்பங்களை உருவாக்குவதன் மூலம் நஷ்டங்கள் ஏற்படுத்தப்பட்டால அதனால் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்பு, சொத்துக்களின் இழப்பு, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் இடைநடுவில் ஸ்தம்பிதமடைதல் மற்றும் வெளிநாட்டு உதவிகள் தடைப்படுதல் போன்ற இக்காரணங்களால் சிக்கல்கள் மேலும் உக்கிரமடையக் கூடும்.

சிறுபான்மை இன மக்களது சமய மாநாடு குறித்து சில பௌத்த சிங்கள அமைப்புக்கள் சுமத்தும் குற்றச்சாட்டுகளிலுள்ள உண்மைத் தன்மையோ பொய்த்தன்மையோ வேறு விடயம். அவர்களது குற்றச்சாட்டுக்கள் உண்மையாயிருப்பதாகக் கொண்டாலும் தென்பகுதிச் சிங்கள மக்கள் அச்சிறுபான்மை மதப்பிரிவினர்களுக்கு அவர்களது உயிர், உடைமைகளுக்குச் சேதம் விளைவிப்பது மற்றும் வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் மேற்கொள்வது ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுவர்களேயானால், சர்வதேச சமூகம் சிங்கள பௌத்தர்களை கொடுமைக்காரர்களாகக் கருதி எம்மை ஓரங்கட்ட விளைவர். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் 4ஆவது ஈழப்போர் ஆரம்பிக்கப்படுவதோ அல்லது ஏற்கனவே அவ்விதம் ஆரம்பிக்கப்பட்டிருப்பின் அதில் வெற்றியடைவதன் மூலம் அதனை இலேசாக முடிவுக்குக் கொண்டு வருவதோ விடுதலைப் புலிகள் அமைப்புக்குச் சாத்தியமானதொன்றாக அமையும். வடக்கு - கிழக்கு பகுதிகளின் பாதுகாப்புக்கு அவசியமான இராணுவ மற்றும் பொலீஸாரின் சேவைகளையும், அதற்குரிய நிதிச்செலவையும் அரசு தென்பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பாவிக்க முயல்வதன் காரணமாக, நிலைமை விடுதலைப் புலிகள் அமைப்புக்குச் சாதகமாகவே அமையும் என்பதை உணர்ந்துகொள்வது அத்துணை சிரமமானதா?

வியெஸ்ரி

ரணில் விக்கிரமசிங்க அரசின் சமாதான நடவடிக்கைகளின் பிரதான சித்தாந்தமே, விடுதலைப் புலிகள் அமைப்பும் தமிழ் பேசும் மக்களும் வெவ்வேறான பிரிவினரல்ல வென்ற வகையில் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்புடன் ஒன்றிணைந்தவர்களே என்பதாகும். விடுதலைப் புலிகள் அமைப்பின் கருத்து கூட இந்த விதத்திலேயே வெளியிடப்பட்டு வருகின்றது. ஆனால், விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பாடுகள் குறித்து மற்றைய தமிழ் அரசியல் அமைப்புக்கள் எதிர்ப்பு உணர்வலைகளை வெளிக்காட்டுகின்றன. ஆனால், 1983 ஜூலைக் கலவரம் போன்றதொரு சம்பவம் மீண்டுமொரு தடவை நாட்டில் இடம்பெறுமானால் மனது விரும்பாவிட்டாலும் கூட விடுதலைப் புலிகளின் பின்னால் அந்த அமைப்புக்கள் ஒன்றுதிரள நேரிடும். தற்போது உள்ளதைவிட பெரும் ஈடுபாட்டுடன் விடுதலைப் புலிகள் அமைப்பையும் அவர்களது கோரிக்கைகளையும் விரும்பியோ விரும்பாமலோ முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்த தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டி ஏற்படும். வடக்கில் புலிகளின் தமிழீழமும் தெற்கில் றுவாண்டா நாட்டின் நிலைபோன்று 'தோல்வியுற்றுச் சிதறுண்ட அரசும்' உருவாவதற்கு அது வழிவகுப்பதாய் அமையும்.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நெடுந்தீவு பிரதேச சபையினர் ஏற்பாடு செய்த நூலக மற்றும் கணனிக் கண்காட்சியை மாணவர்கள் பார்வையிடுவதையும், மாவலித்துறை துறைமுகப்பகுதியில் பிரதேச சபையினர், செயலாளர் எஸ்.தில்லைநாதன் தலைமையில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (எ)

பக்ஸ் சேவை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை29

மானிப்பாய் தபால் நிலையத்திற்கு புதிதாக வழங்கப்பட்ட தொலைநகல் (பக்ஸ்) சேவை இன்று காலை 10மணிக்கு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மானிப்பாய் தபால் அதிபர் வி. அன்ரனிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் என்.ஜெயரட்ணம் தொலைநகல் சேவையை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பார். (எ-5)

சொற்பொழிவாளர் கௌரவிப்பு

வலிகாமம் தெற்கு, ஜூலை29

உடுவில் சிவஞானப்பிள்ளையார் ஆலய மகோற்சவ காலங்களில் சமயச சொற்பொழிவாற்றிய சைவப் புலவர் எம்.எஸ். சிறிதயாளனுக்கு மேற்படி ஆலய தர்மகர்த்தாவும் சிவஞானவாரிய தலைவருமான பிரம்மஸ்ரீ வா. பாலசுப்பிரமணியக் குருக்கள் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார். (எ-152)

நல்லூர் பிரதேசத்தில் வீடுகள் நிறுவ 89 பயனாளிகள் தெரிவாகியுள்ளனர்

வலி.வடக்கு,ஜூலை29

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 49 புதிய வீடுகளை நிறுவுவதற்கும் 19 வீடுகளைப் புனரமைப்பதற்கும் 21 அவசரகால தற்காலிகக் கொட்டகைகள் அமைப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரியாலை, திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் வீடு திருத்தம், புதிய வீடுகள் அமைத்தல் வேலைகளுக்கென பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாகப் பாதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் தரைமட்டமாக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

அரியாலைப் பகுதியில் ஜே/91 கிராம அலுவலர் பிரிவில் மூன்று வீடுகளும், ஜே/93 பிரிவில் 4 வீடுகளும், ஜே/94 பிரிவில் 11 வீடுகளும் ஜே/95 பிரிவில் 22 வீடுகளும், திருநெல்வேலி பாற்பண்ணை கிராம அலுவலர் பிரிவில் 9 வீடுகளும் அரை நிரந்தர வீடுகள் நிறுவும் திட்டத்தின்கீழ் அமைக்கப்படவுள்ளன.

வீடுகள் புனரமைக்கும் திட்டத்தின்கீழ் ஜே/91 பிரிவில் 3 வீடுகளும், ஜே/93 பிரிவில் ஒரு வீடும், ஜே/94 பிரிவில் 4 வீடுகளும், ஜே/95 பிரிவில் 11 வீடுகளும புனரமைக்கப்படவுள்ளன.

அவசரகால தற்காலிக கொட்டகைகள் நிறுவும் திட்டத்தின்கீழ் அரியாலைப் பகுதியில் ஜே/93 பிரிவில் 2 வீடுகளும், ஜே/94 பிரிவில் 8 வீடுகளும், ஜே/95 பிரிவில் ஒரு வீடும், கொக்குவில் கிழக்கு ஜே/122 பிரிவில் 2 வீடுகளும், திருநெல்வேலி பாற்பண்ணை கிராம அலுவலர் பிரிவில் 5 வீடுகளும், கொக்குவில் மேற்கு ஜே/99 பிரிவில் 3 வீடுகளும் நிறுவப்படவுள்ளன.

(எ-86)

நலன்புரி நிலையங்களில் வாழும் மாணவர் நிலையில் மாற்றம் தேவை

நாட்டுக்கூத்து விழாவில் யாழ். அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஜுலை29

குடாநாட்டில் அடிப்படைக் கல்வி வசதிகள் எதுவும் அற்ற நிலையில் நலன்புரி முகாம்களில் வாழ்ந்துவரும் மாணவர்களின் நிலைமை மாற்றப் படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன்.

நேற்றுமுன்தினம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வடக்கு-கிழக்கு மாகாண நாட்டுக் கூத்து விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்தகால யுத்தத்தின் காரணமாகப் பல பாடசாலைகள் முற்றாக அழிந்துள்ளன. மாணவர்கள் உயிரிழந்தனர். இன்னும் சில மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்திவிட்டு வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்லவேண்டியநிலை ஏற்பட்டது. எனினும், அத்தகைய துயரநிலை நீங்கி இன்று அமைதிச் சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே, மாணவர்கள் கல்வியில் ஆர்வம் செலுத்தி உயர்வு பெறவேண்டும்.

ஏனைய மாவட்ட மாணவர்களின் கல்வி நிலையுடன் எமது நிலையை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அதன் மூலம் நாம் முன்னேறிக்கொள்ளலாம்.

குடாநாட்டில் பல பாடசாலைகளில் போதிய ஆளணி மற்றும் வளங்கள் இல்லாதுள்ளன. சில பாடசாலைகளில் மாணவர்கள் மரங்களின் கீழ் இருந்து கல்விகற்று வருகின்றனர். இவற்றைப் போக்குவதற்கு கல்வியதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (எ-10-ரி)

மாற்று மருத்துவ நிபுணரின் இலவச வைத்திய ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஜுலை29

லண்டனில் வசிக்கும் மாற்று மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி மருது கந்தப்பு யாழ்ப்பாணத்தில் வசதி குறைந்த மக்களுக்கு மாற்று மருத்துவ நிபுணத்துவ சேவையை இலவசமாக வழங்கவுள்ளார்.

எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை 'இலக்கம் 288, பிரதான வீதி, யாழ்ப் பாணம்' என்ற முகவரியில் உள்ள பிலிப் நேர்சிங்ஹோமில் இந்த சிகிச்சை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

35வயதுக்கும் 70வயதுக்கும் இடைப்பட்டவர்களில் முதுகுவலி, இடுப்பு, முழங்கால், கணுக்கால் பிரச்சினைகளால் நடக்கவோ அல்லது முழங்காலை மடித்து இருக்கவோ சிரமப்படுபவர்களும், கழுத்துப் பிரச்சினை களால் தோள்மூட்டு, முழங்கை மூட்டு, மணிக்கட்டு ஆகியவற்றில் ஏற்படுகின்ற வழங்காமையால் அவதியுறுபவர்களும் மாத்திரம் நிபுணத துவ ஆலோசனை பெறமுடியும்.

இந்த இலவச சேவையைப் பெற விரும்புவோர் கிராமசேவகர்களிடமோ அல்லது உதவி அரசாங்க அதிபர்களிடமோ அல்லது யாழ்.அரச அதிபரிடமோ இருந்து பெறப்பட்ட சிபார்சுக் கடிதத்துடன் வரவேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இச்சேவை நெடுந்தீவு மரகதமொழி - கந்தப்பு தம்பதியரின் ஞாபகார்த்தமாக நடத்தப்படுகின்றது.

(ஐ)

மாவைக் கந்தன் அன்னதான சபை பொதுக்கூட்டம்
காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை ஓய்வுபெற்ற ஊழியர்களை
இணைத்துக்கொள்ளல்

மேற்படி சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை (30.07.2003) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் 20.03.2003 அன்று நடைபெற்ற மேற்படி சபையின் பொதுக்கூட்டத் தீர்மானத்துக்கமைய ஓய்வுபெற்ற ஊழியர்களும் எமது சபையில் இணைந்துக்கொள்ளப்படுவர். எனவே, ஆர்வமுள்ள ஓய்வுபெற்ற ஊழியர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

க.நாகராசா
செயலாளர்.

மாவைக்கந்தன் அன்னதான சபை,
காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை.

(20823) (11-19-31)

சின்னஞ்சிறு விளம்பரம்

எல்ப் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள எல்ப் (Elf 350) கென்ரெய்னர் முழு பொடியுடன் (அலுமினியம்) விற்பனைக்குண்டு. மொத்த வியாபாரிகளுக்கு உகந்தது. தொடர்பு: N.பாபு, கொக்குவில் கிழக்கு, காளிகோயில், கோண்டாவில். (20806)

மாசேரியில் இன்று கருத்தரங்கு

வரணி,ஜுலை29

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் வழங்கப்படும் மீள்குடியமர்ந்தவர்களுக்கான உதவித்திட்டம் தொடர்பான கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மாசேரி கிராம முன்னேற்றச் சங்க மண்டப்பத்தில் நடைபெறவுள்ளது. (எ-170)

இடைக்குறிச்சியில் வாக்காளர் பதிவு

வரணி.ஜுலை29

இடைக்குறிச்சி கிராம உத்தியோகதர் பிரிவில் வசிப்பவர்களில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களும்வும் வாக்காளர் இடாப்பில் இதுவரை தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்யாதவர்களும் உடனடியாக தமது அலுவலகத்துக்குச் சமுகம் அளித்து உரிய படிவங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என கிராம அலுவலர்ந. இராசகுமாரன் அறிவித்துள்ளார். (எ-170)

பேக்கரிகள் மீது சட்ட நடவடிக்கை

தென்மராட்சி,ஜுலை29

சுகாதாரமற்ற முறையில் இயங்கும் பேக்கரிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுமக்களுக்கு உணவுப் பொருள்களை விநியோகிக்கும் பேக்கரிகளை சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடத்துமாறும்-

சுகாதாரமற்ற முறையில் இயங்கும் பேக்கரிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் - சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (எ-117)

வெடிக்காத நிலையில் மிதிவெடிகள் மீட்பு!

தென்மராட்சி,ஜுலை29

மீளக்குடியமர்வதற்காக துப்பரவு செய்த காணிக்குள் பத்துக்கு மேற்பட்ட மிதிவெடிகள் மீட்கப்பட்ட சம்பவம் கடந்த சனியன்று சாவகச்சேரி பெரிய மாவடிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

படையினர் சங்கத்தானையில் நிலைகொண்டிருந்த வேளையில், இந்தக் காணியில் காவலரண் அமைத்திருந்தனர்.

தற்போது மீளக்குடியமர்வதற்காக காணி உரிமையாளரின் வேண்டுகோளின் பிரகாரம் 'ஹலோட்ரஸ்ட்' மிதவெடி அகற்றும் நிறுவனத்தினர் அன்றைய தினம் காணியை துப்பரவு செய்தபோது இந்த மிதிவெடிகள் மீட்கப்பட்டன. (எ-117)

தென்மராட்சியில் நுளம்பு தொல்லை

தென்மராட்சி,ஜுலை29

தென்மராட்சி பிரதேசத்தில் அண்மைக்காலமாக இரவு வேளைகளில் நுளம்புகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

அண்மையில் பிரதேசத்தில் பெய்த மழை மற்றும் கடும் காற்று ஆகியவற்றின் பின்னர் நுளம்பு பெருகுவது அதிகரித்துக் காணப்படுவதாகவும்-

கொடும் வெயில் காரணமாக நீர் நிலைகள் வற்றியுள்ள இவ்வேளையில் நுளம்பு பெருகி வருவது குறித்தும் கவலை தெரிவிக்கப்பட்டது. (எ-117)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொலீஸாருக்கு நஷ்டஈடு

கொழும்பு,ஜுலை29

அண்மைக்காலங்களில் வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 668 பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கு பொலீஸ் தலைமையகம் நஷ்டஈடு வழங்கவிருக்கிறது. இதன் முதற்கட்டமாக 21 பொலீஸாருக்கு நேற்று பொலீஸ் தலைமையகத்தில் வைத்து பொலீஸ்மா அதிபர் ரி.ச. ஆனந்தராஜாவினால் நஷ்டஈடு வழங்கப்பட்டது.

ஒருகோடியே 3லட்சத்து 50 ஆயிரம் ரூபா பொலீஸ்நலன்புரி அமைப்பின் ஊடாக இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. காலி, தங்காலை, களுத்துறை, இரத்தினபுரி, பெலியத்த உடுகம போன்ற பொலீஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலீஸாருக்கே இந்த நஷ்டஈடு வழங்கப்பட்டது.

வீடுகள் மற்றும் உடைமைகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்கு அமைய 7 ஆயிரம் ரூபா முதல் 65 ஆயிரம் ரூபா வரையிலான தொகை வழங்கப்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்தம் காரணமாக இலங்கைப் பொலீஸாருக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டமை இதுவே முதற் தடவையாகும். (ஐ)

பணம் அபகரித்த சிப்பாய் குறித்து மனித உரிமைகள் ஆ.குழு விசாரணை

யாழ்ப்பாணம்,ஜுலை29

முகமாலை இராணுவச் சோதனைச் சாவடி ஊடாக யாழ். வரும் போது பயணி ஒருவரிடம் படைச் சிப்பாய் ஒருவர் பணத்தை அபகரித்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணையை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் ஆரம்பித்துள்ளது.

பயணியிடம் பணத்தை அபகரித்ததாகக் கூறப்படும் படைச்சிப்பாயை அடையாளம் காணும் பொருட்டு அடுத்த வாரமளவில் அடையாள அணிவகுப்பொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் ஆணை மேற்கொண்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கென நேற்று முகமாலைப் பகுதிக்குச்சென்ற மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக விசாரணை அதிகாரி எஸ்.டெரோஸ் அந்த முகமாலை இராணுவ பொறுப்பதிகாரியைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சோதனைச் சாவடியில் இவ்வாறு ஒரு சம்பவம் நடந்ததென இதுவரை எவரும் தமக்கு முறையிடவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரியிடம் தெரிவித்த இராணுவ அதிகாரி, அப்படியானதொரு சம்பவம் நிகழ்ந் திருந்தால் அதுபற்றிய விசாரணைகளுக்குத் தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

தண்ணீரூற்று, முள்ளியவளையைச் சேர்ந்த துரைராஜா - கமலநாதன் என்பவர் யாழ். வரும்போது தனது ஒரு தொகைப்பணமும், அடையாள அட்டையும் முகமாலையில் இராணுவத்தினரால் திருடப்பட்டன என்று மனித உரிமை ஆணைக் குழுவில் அண்மையில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார் என்றும் - எனினும் அவருக்கு குறிப்பிட்ட சிப்பாயை சரியாக அடையாளம் காட்டத் தெரியாமையால் அடையாள அணிவகுப்பு ஒன்றை அடுத்த வாரமளவில் நடத்தி அவரை இனங்கண்டு துரித விசாரணைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் - மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரி தெரிவித்தார். (எ-8)

இடம்மாற்றம்
மனதுருக்கம் - இலங்கை

இல.102, யாழ். புகையிரத நிலைய வீதியில் இயங்கிவந்த மேற்படி ஸ்தாபனம் ஆவணி மாதம் முதலாம் திகதியில் இருந்து இல.17, சுவாட்ஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி என்னும் முகவரிக்கு இடம்மாற்றம் செய்யப்படுகின்றது என்பதை யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

மனதுருக்கப்பணியில்:
த.துரைராசா (இணைப்பாளர்)

(20816) (21-15-19)

சுன்னாகம் வர்த்தக சமூகத்தின் வாழ்த்துக்கள்

சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் தலைவரும்,
யாழ்ப்பாண மாவட்ட வர்த்தகர் சங்கங்களின்
சம்மேளனப் பொறுப்பாளரும்,
ஓய்வுபெற்ற வெளிக்கள உத்தியோகத்தரும்
சுன்னாகம் சண்ராஜ் கொம்பிளக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரும்,
பிரபல சமூக சேவையாளருமாகிய
உயர்திரு.
நடராசா சனர்முகவேல்
அவர்கள் சுன்னாகம் மாவட்ட நீதிபதி
திருமதி S.இளங்கோவன் முன்னிலையில் 30.06.2003 இல்
அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம்
செய்து கொண்டமையையிட்டு நாம் மகிழ்வுறுவதோடு,
அவரது பணி மேன்மேலும் சிறப்படைய எல்லாம்வல்ல
இறைவனைத் தியானித்து வாழ்த்துகின்றோம்.

நிர்வாகம்,
சுன்னாகம் வர்த்தகர் சங்கம்,
சுன்னாகம் வர்த்தகர்கள்,
வர்த்தக சங்க அலுவலக உத்தியோகத்தர்கள்,
பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தர்கள்.

(20813) (21-23-15-19)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிறந்த சமய, சமூக சேவையாளர்களான
உயர்திரு. தி. பாலச்சந்திரன் அவர்களும்
மற்றும்
உயர்திரு. சு.தங்கைவேணியன் அவர்களும்
வேலனை சிற்பனை முருகன் அருளாலும் இனுவைக்கந்தன் அனுக்கிரகத்தாலும் அரும்பணி சேவைகளாற்றிப் பல்லாண்டு வாழ வாழ்த்தி ஆசி கூறுகின்றோம்.

பிரம்மஸ்ரீ ந.உருத்திரமூர்த்தி குருக்கள் குடும்பம்,
பிரம்மஸ்ரீ சி.குமாரராஜக் குருக்கள் குடும்பம்.

கந்தசுவாமி கோயிலடி,
இணுவில்.

(20805) (19-15)

வரலாற்றுக்கே வரலாற்றை உணர்த்திய

முல்லை முகாம் தகர்ப்பின் தெரொலிகள்

1996ஆம் ஆண்டின் முற்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்றிலுமாகக் கைவிட்டுத் தமது நடவடிக்கைகளை வன்னிக்கு பின்நகர்த்தியதுடன் புலிகள் பலமிழந்து விட்டார்கள், அவர்களால் இனி எழுந்திருக்கவே முடியாது என்று மனப்பால் குடித்தனர் சிங்கள அரசியல் தலைவர்களும் அரச படை அதிகாரிகளும்.

இன்னமும் சொற்ப காலத்துக்குள் புலிகளை வன்னிக்காட்டுக்குள் வைத்து முற்றாக அழித்து விடுவோம், இனி அவர்களுக்கு மீட்சியே கிடையாது என்று வரிந்து கட்டிக் கொண்டு உலகெங்கிலும் 'தம்பட்டம்' அடித்துத் திரிந்தார்கள் அப்போதைய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்த ஐயாவும் ஜனாதிபதி சந்திரிகா

ஆர்மையாரும்.

யாழ்ப்பாணத்தைப் பிடித்த கையோடு வன்னியையும் பிடிக்கும் நோக்கில் முழுவீச்சுடன் தமது படை நகர்வுகளை பரந்தன் கிளிநொச்சி நகரங்களை நோக்கி முன்னெடுத்தன ஆனையிறவுப் படைகள்.

அந்த நகர்வும் ஓரளவுக்கு வெற்றியாகவே அமைந்தது. பரந்தன், கிளிநொச்சி நகரங்கள் படையினரின் வசம் வீழ்ந்தன.

வெற்றிக்கு மேல் வெற்றி என்று இறுமாப்புடன் கூறிக்கொண்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிப் போயிருந்த அனுருத்த ஐயாவுக்கும் அரச படைகளுக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் கொடுத்த முதலாவது அதிர்ச்சி வைத்தியத்தின் மறுபெயர்தான் 'ஓயாத அலைகள்-1'.

'சாம்பல் மேட்டிலிருந்து கிளம்பும் பீனிக்ஸ் பறவை' போல புலிகள் திடீரென வெளிக்கிளம்பி முல்லை முகாம் மீது பாய்ந்த போது சிங்கள தேசம் அதிர்ந்தது.

அரச படைகள் புலிகளின் அடுத்த இலக்கு யாழ்ப்பாணமாகத்தான் இருக்கும் விடுதலைப் புலிகள் தமது நகர்வுகளை யாழ்ப்பாணம் நோக்கி ஆரம்பித்தால் அதனை எவ்வாறு முறியடிக்கலாம் என்று சிந்தித்து அதற்கான நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த அரச தலைமைகளும் படை அதிகாரிகளும் தமிழீழத் தலைவனின் கண்கள் முல்லை மண் மீது பதிந்து விட்டது என்பதை அப்போது அறிந்து கொண்டிருக்க நியாயம் இல்லை. விடுதலைப் புலிகளை 85 வீதத்துக்கு மேல் அழித்தாகிவிட்டது. இனி வெறும 15 வீதமே பாக்கி. அது அரச படைகளுக்கு ஒரு 'தூசு' என்று 'பப்படா' அடித்த அனுருத்த ஐயா, முல்லை மண் மீது புலிகளின் அதிரடிப் பாய்ச்சல் நடக்கும் என்று கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்.

இப்படியான ஒரு சூழலில் தான் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் நேரடி நெறிப்படுத்தலில் புலிகளின் படையணிகள் ஓயாத அலைகளாக முல்லைத்தீவு படை முகாம் மீது பாய்ந்தன.

1996-07-18.....

அன்று எவருமே எதிர்பார்த்திராத வீரமுழக்கம் முல்லை மண்ணில் அரங்கேறியது. தேசியத் தலைவரின் மதிநுட்பமான தாக்குதல் திட்டத்துக்கு அமைய தமிழர் படை முல்லை மண்ணை மீட்டெடுத்தது.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் முல்லைத்தீவு நகரை தமது இரும்புக் கரங்களுக்குள் வைத்திருந்த அரச படைகள், தமது பிரதான படை முகாமை ஒரு இரும்புக்கோட்டையாகவே மாற்றியிருந்தனர்.

கண்ணிவெடி வயல்கள், முடக்பி வேலிகள், காவலரண் தொடர்கள் என ஏராளமான பாதுகாப்பு முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆட்லறிகள், மோட்டார்கள் உட்பட கனரக ஆயுதப் பிரிவுகள் பலவும் அங்கு நிலை நிறுத்தப்பட்டிருந்தன. முல்லை நகருக்கு சமீபமாக பாரிய கடற்பிரதேசம் ஸ்ரீலங்காக் கடற்படையினரின் பேர்க்கப்பல்கள், டோறாக்கள் என்பவற்றின் கூரிய கண்காணிப்பின் கீழ் இருந்தன.

முல்லைத்தீவு கடற்பரப்பில் அடிக்கடி ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் டோறாக்கள் தமது கண்ணில் அகப்பட்ட மீன்பிடி வள்ளங்கள் மீது மூர்க்கத்தனமாக தாக்கி 6 வருடங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவி மீனவர்களைப் பலி கொண்டிருந்தன. சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிக படைகள் அங்கு நிறுத்தப்பட்டிருந்தன.

இப்படியாக அரச படைகளின் இரும்புக் கோட்டையாக விளங்கிய முல்லைத்தீவு படைமுகம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டு மீட்கப்பட்ட நிகழ்வானது உலகப் போரியல் வரலாற்றில் பெரும் சாதனையாகவே பார்க்கப்பட வேண்டியதாகும்.

தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றில் முல்லை முகாம் தகர்ப்பு ஒரு முக்கிய திருப்பு முனையாகவே அமைந்தது. முன்னெப்போதும் இல்லாத வகையில் ஆயிரத்து இருநூறுக்கும் அதிக படையினர் கொல்லப்பட்டனர்.

முதற்றடவையாக இரண்டு ஆட்லறிப் பீரங்கிகள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. மோட்டார்கள், கனரக ஆயுதங்கள் உட்பட சுமார் இரண்டாயிரம் கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய ஆயுத தளபாடங்கள் கைப்பற்றப்பட்டன.

மீட்கப்பட்ட ஆயுதங்களையும் உயிரிழந்த படையினரின் சடலங்களையும் அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்கே சில நாள்கள் எடுத்தன.

இத்தகைய பெருவெற்றிச் சமரிலே பொதுமக்களின் பங்களிப்பு மிகவும் உன்னதமாக அமைந்தது என்று களமுனைத் தளபதிகள் நினைவு கூருகின்றார்கள்.

இறந்த படையினரின் சடலங்கள் மற்றும் ஆயுதங்களை அப்புறப்படுத்தவும் காயமடைந்த போராளிகளுக்கு இரத்ததானம் வழங்கி அவர்களைப் பராமரிக்கவும் பொதுமக்களே பெரிதும் உதவியிருக்கின்றார்கள்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியின் 7ஆம் ஆண்டு நினைவுதினம் அண்மையில் முல்லைத் தீவில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

மாணவர்கள், போராளிகள், தளபதிகள், பொதுமக்கள் என பல்லாயிரக் கணக்கானோர் அணிதிரண்டு நிகழ்வில் பங்கேற்றனர். முல்லைத்தீவு பொது மைதானத்தில் (இது முன்னர் முல்லைமுகாம் படையினரின் விளையாட்டு மைதானமாக இருந்தது) பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன. முன்னதாக முல்லைத்தீவு பேருந்து நிலையத்திலிருந்து எழுச்சி ஊர்வலம் ஆரம்பமானது. மாலை 4மணியளவில் பேருந்து நிலையத்திலிருந்து சாள்ஸ் அன்ரனி சிறுத்தைப் படையணியின் அணிவகுப்பு முன்னே நகர அதன் பின்னால் போராளிகள், பொதுமக்கள், மாணவர்கள் அனைவரும் நகர்ந்து சென்றார்கள்.

ஊர்வலம் ஆரம்பமாவதற்கு சற்று முன்பதாக அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தார் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை.

முல்லை முகாம் படைகளின் பிரதான விநியோக பைபமாக விளங்கியது முல்லைத்தீவுக் கடல். அந்தக் கடற்பரப்பில் தீரத்துடன் சமராடி படையினரின் கடல் விநியோகப் பாதைகளைத் துண்டித்ததுடன் பல கடற்கலங்களையும் தாக்கி அழித்து முல்லையின் வெற்றிக்கு அடித்தளம் இட்டவர்கள் கடற்புலிகள்.

அந்தக் கடற்புலிகளின் படையணிகளை வழிநடத்திய தளபதி சூசை அங்கு வந்திறங்கி மக்களுடன் அளவளாவினர்.

முல்லைத்தீவிலிருந்து
- அற்புதன் -

ஊர்வலம் ஆரம்பமானதும் மக்களோடு மக்களாக தளபதி சூசையும் ஊர்வலத்தில் பங்கேற்றார்.

ஊர்வலம் முல்லைத்தீவு பொது மைதானத்தை அடைந்ததும் அங்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அங்கு மாலதி படையணியின் சிறப்புத்தளபதி கேணல் விதுஷா, வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஆகியோர் உட்பட தளபதிகள், போராளிகள், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் திரண்டிருக்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்த வெற்றி விழாவில் கலந்து கொள்வதற்காக சுவிஸ் நாட்டிலிருந்து வந்திருந்த முல்லை மக்கள் சிலரும் அவர்களுடன் கூடவந்திருந்த சுவிஸ்நாட்டு ஆடும்பம் ஒன்றும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

வெற்றி விழாவில் கலந்து கொண்டிருந்த மக்கள் அனைவரது முகங்களிலும் இனந்தெரியாத ஒரு மகிழ்ச்சி பிரவாகம் இழையோடியிருந்ததை அவதானிக்கமுடிந்தது. ஆறு வருடங்களாக அடிமையப்பட்டுக் கிடந்த தாது முல்லை மண்ணை மீட்டெடுத்த நாளைக் கொண்டாடும் மகிழ்ச்சி அவர்களுக்கு.

சுவிஸ்நாட்டிலிருந்து வந்தவர்கள் வெற்றி விழாவுக்கு வந்து அங்கு நடைபெற்ற நிகழ்வுகளை புகைப்படம் மற்றும் வீடியோப் படம் பிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்தது.

அவ்வாறு வந்திருந்த ஒருவரிடம் உரையாடிய போது அவர் சுவிஸ் நாட்டில் முல்லை மண்மீட்பின் எதிரொலி எவ்வாறு அமைந்தது என்று விளக்கமாகக் கூறினார்.

"அன்றையதினம் காலையிலேயே எமக்கு அந்த வெற்றிச் செய்தி கிடைத்துவிட்டது".

"சுவிஸில் ஈழத்தமிழர்கள் எல்லோரும் ஆனந்தக் கூத்தாடினார்கள். அதிலும் அங்கிருக்கின்ற முல்லைத்தீவு மாவட்ட மக்களின் அன்றைய மகிழ்ச்சிப் பெருக்கை வர்ணிக்கவே முடியாது.

"அங்குள்ள ஈழத்தமிழர் எல்லோரும் அன்றைய தினம் வேலைகளுக்குச் செல்லவில்லை. அனைவரும் ஒரிடமாகக் கூடினோம். முல்லை மண்வெற்றியை அறிவித்து அன்றைய தினமே எழுச்சிக் கூட்டம் ஒன்றையும் நடத்தினோம். அது மறக்க முடியாதநாள்.

"எழுச்சிக் கூட்டங்களில் கலந்து கொண்டவர்கள் அனைவருமே தங்களால் பங்களிப்பினை போராட்டத்துக்காக வழங்கி உதவினார்கள்" - என்று கூறினார்.

தமிழீழத்தில் மட்டுமன்றி உலகத்தரை எங்கிலும் வாழுகின்ற தமிழ் மக்களின் ஆனந்தத்துக்கு வழிவகுத்த ஒட்டு மொத்த தமிழர்களின் தலைகளையும் மீண்டும் ஒரு தடவை நிமிர வைத்த - தமிழனின் அடிமை விரத்தினை உலக அரங்கிலே மீண்டும் ஒருதடவை ஓங்கி ஒலிக்கச் செய்த முல்லைத்தீவு படைமுகாம் தகர்ப்பு தல் போரியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

நிகழ்வுகளின் வரிசையில் பொதுச் சுடரினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் ரோ.தங்கனும் தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசையும் ஏற்றிவைத்தனர்.

விழாக் கூட்டரங்கை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா ஏற்றினர்.

இவர்களைத் தொடர்ந்து மற்றொரு முக்கியமான நிகழ்வு இடம்பெற்றது. முல்லை மண்மீட்புச் சமரிலே தமது உயிரிகளை ஆகுதியாக்கி வெற்றிக்கு அத்திவாரமிட்டுச் சென்ற கரும்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு அது. தளபதிகள், போராளிகள், பொதுமக்கள், சிறுவர்கள் என அனைவரும் அந்தக் கரும்புலிகளுக்கு மௌனவிரதஞ்சலி செலுத்தினர்.

அரங்கநிகழ்வு வரிசையில் கலை நிகழ்வுகளும் சிறப்புரைகளும் மாறி மாறி இடம் பெற்றன.

முல்லைத்தீவு பங்குத்தந்தை அருட்திரு.பத்திநாதர் அடிகளார், முல்லை வலய உதவிக்கல்விப் பணிப்பாளர், வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், தளபதி கேணல் விதுஷா ஆகியோரின் சிறப்புரைகள் இடம்பெற்றன.

(12ஆம் பக்கம் பார்க்க)

தேசிய மெய்வன்மைப் போட்டிகளின் முதலிரு நாள்களில் 7 புதிய சாதனைகள்

கொழும்பு,ஜுலை29

81 ஆவது தேசிய மெய்வன்மைப் போட்டிகளின் முதலிருநாள்களில் 7 புதிய சாதனைகள் படைக்கப்பட்டன.

சுகததாஸ அரங்கில் வெள்ளியன்று மாலை இப்போட்டிகள் ஆரம்பமாகின.

இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு விழாவை ஆரம்பித்து வைத்தார். இப்போட்டிகளுக்கு அனுசரணை வழங்கும் லங்கா சிமெந்து நிறுவனத்தின் தலைவர் அனில் கொனவத்த, கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார்.

முதல் நாளன்று பெண்களுக்கான 5,000 மீற்றர் ஓட்டத்தில் இரத்தினபுரி மெய்வன்மைச் சங்கத்தைச் சேர்ந்த சுஜீவா ஜயசேன 16 நிமிடம் 25.18 செக்கன்களில் ஓடினார். தேசிய மெய்வன்மைப் போட்டிகளில் இதுவொரு புதிய சாதனையாகும்.

ஆண்களுக்கான 3,000 மீற்றர் ஸ்ரீபிள் சேஸ் போட்டியில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த டி.எஸ்.பி. மெண்டிஸ் 8 நிமிடம் 55.07 செக்கன்களில் ஓடி புதிய சாதனைபடைத்தார்.

இரண்டாவது நாளான சனிக்கிழமை பெண்களுக்கான 200 மீற்றர் போட்டியில் சுசந்திகா ஜயசிங்க 23.16 செக்கன்களில் ஓடி புதிய சாதனை புரிந்தார்.

1998 இல் 23.28 செக்கன்களில் ஓடி சுசந்திகா படைத்திருந்த சாதனையை இம்முறை அவரே முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆண்களுக்கான உயரம் பாய்தல போட்டியில் ஜே.ஏ.என். குமாரி 15.91 மீற்றர் பாய்ந்து புதிய சாதனை படைத்தார். பெண்களுக்கான 800 மீற்றர் போட்டியில் எம். பிரியதர்ஷினி 2 நிமிடம் 08.23 செக்கன்களில் ஓடி சாதனை புரிந்தார்.

ஆண்களுக்கான பரிதிவட்டம் வீசுதலில் ரி.அலைலிமா 52.79 மீற்றர் தூரம் எறிந்து சாதனை படைத்தார்.

பெண்களுக்கான 100 மீற்றர் போட்டியில் பி.எச்.பி. சுஜீவா ஜயசேன 33 நிமிடம் 57.96 செக்கன்களில் ஓடி சாதனை படைத்தார்.

வெளிநாடுகளைச் சேர்ந்த 29 போட்டியாளர்கள் உட்பட சுமார் 1,200 போட்டியாளர்கள் இதில் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தாய்லாந்து வீரர் எஸ். சோம்பன்குய் 4.80 மீற்றர் பாய்ந்து முதலிடம் பெற்றார். இரண்டாமிடத்தை இலங்கை இராணுவ வீரர் ஆர்.பி. பெரேரா பெற்றார். மூன்றாமிடத்தை மற்றொரு தாய்லாந்து வீரரான சோம்சென்ட் கம்குகா பெற்றார்.

ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்திலும் தாய்லாந்து வீரரான சிச்சிசாப் சுவோன் பிராட்டே 21.23 செக்கன்களில் ஓடி முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆறும் பைவத்தில் மாவட்ட மெய்வன்மைச் சங்கங்கள், மெய்வன்மைக் கழகங்கள் ஆகியவற்றின் சார்பில் மெய்வல்லுநர்கள் அணிவகுத்துச் சென்றனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட வடக்கு - கிழக்கிலுள்ள மாவட்ட மெய்வன்மைச் சங்கங்களும் இப்போட்டிகளில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

ரொஹான் பிரதீப்குமார பங்குபற்றவில்லை

இதேவேளை, வெள்ளியன்று நடைபெற்ற ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தின் முதல் சுற்றுப்போட்டியில் இலங்கையின் முன்னனி வீரர்களில் ஒருவரான ரொஹான் பிரதீப்குமார பங்குபற்றவில்லை.

ஈரானிலுள்ள கழகமொன்றின் சார்பில் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக அவர் சென்றுவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால், எதிர்வரும் உலக மெய்வன்மைப் போட்டிகளுக்கான 4x400 மீற்றர் இலங்கை அஞ்சலோட்ட அணியைத் தெரிவு செய்வதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ரொஹான் இப்போட்டிகளில் பங்குபற்றாமை மெய்வன்மைச் சங்க அதிகாரிகளிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற 400 மீற்றர் தகுதிகாண் போட்டிகளில் சுகத் திலகரட்ன, ரங்க விமலவன்ஸ, பிரசன்ன அமரசேகர ஆகியோர் தத்தமது குழுவில் முதலிடம் பெற்றனர். இப் பிரிவின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெறவிருந்தது.

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜுலை29

பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் முடமாவடி ஞானக்குழந்தை இல்லப் பாடசாலையின் 3 ஆவது ஆண்டு விளையாட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை முன்றிலில் நடை பெறவுள்ளது.

செல்வி ஜெயமாலினி தங்கராசா தலைமையில் நடைபெறும் விழாவில பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ்.இந்துக்கல்லூரி ஆசிரியர் பரகுமாரும் கௌரவ விருந்தினராக பாலர் கல்விக்கழக இணைச் செயலாளர் திருமதி ச.ஜெயபாலசிங்கமும் கலந்து கொள்வர். (ஐ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை29

இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை கட்டுடை விநாயகர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் கால் இறுதி ஆட்டத்தில் நவாலி தென்றல் விகழகமும் கட்டுடை விநாயகர் விகழகமும் மோதுகின்றன. (ஐ-5-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஜுலை29

பருத்தித்துறை உதைபந்தாட்டலீக் யாழ்மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வதிரி பொமேஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யாழ்ப்பாணம் நாவாந்துறை சென்றீக்கிலஸ் விளையாட்டுக் கழகமும் அராலி அண்ணா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஐ-5-86)

ஆசிய கனிஷ்ட சதுரங்க சுற்றுப்போட்டியில் அனைத்து பதக்கங்களும் இந்தியர்களுக்கு

இலங்கையில் சனிக்கிழமை முடிவுற்ற ஆசிய கனிஷ்ட சதுரங்க(செஸ்) போட்டியின் சிறுவர் சிறுமியருக்கான அனைத்து பதக்கங்களையும் இந்திய வீர வீராங்கனைகளே வென்றனர்.

சிறுவர் பிரிவில் பி.மகேஷ் சந்திரன், எஸ்.பூபேஷ், ஆனந்த் மற்றும் பிராதமேஷ் மோகல் தலா 8 புள்ளிகள் எடுத்திருந்தனர். எனினும் ரை பிரேக்கர் அடிப்படையில் மகேஷ் சந்திரன் தங்கமும் பூபேஷ், ஆனந்த் வெளளியும் மோகல் வெண்கலமும் பெற்றனர்.

சிறுமியர் பிரிவில் 9 புள்ளிகள் எடுத்த வைபிரதீபா தங்கமும் ஜெ.ஈ. கவிதா (8 புள்ளிகள்) வெள்ளியும், சவேலிநாத்(7.5) வெண்கலமும வென்றனர்.

இவ்வெற்றியை அடுத்து சிறுமியர் பிரிவில் பதக்கம் வென்ற மூன்று பேரும் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகஜுனியர் போட்டிக்கு தகுதிபெற்றனர்.

இப்போட்டியில் பட்டம் வென்ற மகேஷ் சந்திரன் கிராண்ட் மாஸ்டர் தகுதியையும், பிரதீபா மகளிர் கிராண்ட் மாஸ்டருக்கான தகுதியையும் பெற்றனர்.

பதக்கங்கள் வென்ற பூபேஷ் ஆனந்த், பிராதமேஷ் மோகல் சர்வதேச மாஸ்டர் பட்டத்தைப் பெற்றனர்.

கடந்த ஆண்டு ஆசிய கனிஷ்ட சதுரங்க போட்டியின் இருபிரிவுகளிலும் இந்தியாவே பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது. அவ்வருடம் ஆண்கள் பிரிவில் தீபன் சக்கரவர்த்தியும் பெண்கள் பிரிவில் தானியா சச்தேவும் இப்போட்டிகளில் சாம்பியனாகியிருந்தனர். (ஐ-5)

சர்வதேச நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டி: அமெரிக்காவின் பெல்ப்ஸ் உலக சாதனை

அமெரிக்காவைச் சேர்ந்த நட்சத்திர நீச்சல் வீரரான மைக்கல் பெல்ப்ஸ், சர்வதேச நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டியில் 100மீ. பட்டர்பிளை பிரிவில் புதிய உலகசாதனை படைத்தார்.

10.ஆவது சர்வதேச நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டிகள் ஸ்பெயினில் உள்ள பார்சிலோனாவில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் 100மீ. பட்டர்பிளை பிரிவில் உக்ரைனைச் சேர்ந்த அண்டிரி செர்டினோவ் உலக சாதனை புரிந்தார். இந்த உலக சாதனை படைக்கப்பட்ட அடுத்த 3 நிமிடங்களில் மைக்கல் பெல்ப்ஸ் புதிய உலகசாதனை படைத்தார்.

18வயதான மைக்கல் பெல்ப்ஸின் மூன்றாவது உலகசாதனை இதுவாகும். 100மீ. பட்டர்பிளை பிரிவில் பந்தய தூரத்தை 51.47 விநாடிகளில் கடந்து பெல்ப்ஸ் உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

இந்தப் போட்டிக்கு முன்னதாக நடைபெற்ற அரையிறுதியில் உக்ரைன வீரர் செர்டினோவ் 51.76 விநாடிகளில் கடந்து புதிய உலக சாதனை படைத்திருந்தார். 1997ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கான்பராவில் நடைபெற்ற போட்டியில் ஆஸ்திரேலியாவின் மிகேல் கிலிம் 51.81 செக்கன்களில் கடந்து ஏற்படுத்தியிருந்த சாதனையை செர்டினோவ் முறியடித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

200மீ. பிரெஸ்ட்ஸ்ட்ரோக் பிரிவில் அமந்தா பியர்ட் இத்தூரத்தை 2:29.29 விநாடிகளில் கடந்து உலக சாதனையை சமன் செய்து தங்கப் பதக்கம் வென்றார். 2001ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சீனாவில் கி ஹுய் ஏற்படுத்திய சாதனையை பியர்ட் சமன் செய்தார்.

ஆண்களுக்கான 800மீ. ப்ரீஸ்டைல் பிரிவில் கிராண்ட் ஹோக் கட்டும் 100மீ. ப்ரீஸ்டைல் பிரிவின் மகளிர் பிரிவில் பின்லாந்தின் ஹன்னா மரியா செப்பாலாவும் தங்கம் வென்றனர்.

மூன்றாவது டெஸ்டில் விளையாடுவேன்: இங்கிலாந்து வீரர் ஹோக்காட் நம்பிக்கை

தென்னபிரிக்க அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் நம்பிக்கையுடன் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான மத்தியூ ஹோக்காட் இருக்கிறார்.

சி அண்ட் ஜி கிண்ணத் தொடரில யோர்க்ஷையர் அணிக்காக விளையாடிய ஹோக்காட்டுக்கு கணுக்காலில் காயம் ஏற்பட்டது. இதன் காரணமாக ஏறக்குறைய 6 வாரகால ஓய்வில் இருக்கும் நிலை ஹோக்காட்டுக்கு ஏற்பட்டது.

இந்த நிலையில் அடுத்தமாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் நம்பிக்கையுடன் ஹோக்காட் இருக்கிறார்.

தென்னாபிரிக்காவிற்கு எதிராக தற்போது எட்ஜ்பாஸ்டனில் நடைபெற்று வரும் முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடும் நம்பிக்கையுடன் ஹோககாட் இருந்தார். ஆனால், காயம் குணமாவதற்கு கூடுதலான கால அவகாசம் தேவைப்பட்டதால் முதல் டெஸ்ட் போட்டிக்கு ஹோக்காட் திரும்ப முடியவில்லை.

இது குறித்து ஹோக்காட் அளித்துள்ள பேட்டியொன்றில் அடுத்த இரண்டு வாரங்களில் மீண்டும் போட்டிகளில் கலந்துகொள்ளும் நம்பிக்கையுடன் இருக்கிறேன். குறைந்த தூரம் ஓடி பந்து வீசி வலைப்பயிற்சிகளில் ஏற்கனவே ஈடுபட ஆரம்பித்துவிட்டேன்.

எனக்கு தற்பேது ஏற்பட்டுள்ள காயம் மீண்டும் ஏற்படாமல் இருக்க பார்த்துக்கொள்வது அவசியம். இருப்பினும் விரைவில் போட்டிக்கு திரும்புவேன் என்று எதிர்பார்க்கிறேன்.

என்னை அணியில் தேர்வு செய்வதற்கான சாதகமான சூழ்நிலையை இன்னும் ஓரிரு வாரங்களில் தேர்வுக் குழுவினருக்கு ஏற்படுத்துவேன் என்று கூறினார். (ஐ)

தாயக அணி சம்பியன்

கிளிநொச்சி,ஜுலை29

பிரிட்டனில் இடம்பெற்ற 8 ஆவது தமிழர் விளையாட்டு விழாவின் வலைப்பந்தாட்டப்போட்டியில்

தமிழீழ வலைபந்தாட்ட தெரிவு அணி சம்பியன் பட்டம் வென்றது. புளோமிங் நகரின் நோர்மன்பார்க் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் தாயகத்தில் இருந்து சென்றுள்ள தமிழீழ வலைபந்தாட்டத் தெரிவு அணியுடன் சுண்டுக்குழி மகளிர்கல்லூரியின பிரிட்டிஷ் பழைய மாணவியர் அணி மோதியது.

இதில் 12:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் தமிழீழ வலைபந்தாட்ட தெரிவு அணி வெற்றிபெற்றது. (ஒ)

விளையாட்டு

தம்புள்ளை செல்லும் யாழ். கிரிக்கெட் அணி

யாழ்ப்பாணம்,ஜுலை29

தம்புள்ளையில் இடம்பெறும் 19 வயதுக்குட்பட்டோர் அடங்கிய அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் யாழ்.மாவட்ட அணி தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

அந்த அணியில் இடம்பெறுவோர் பின்வருமாறு:-

பி.லவேந்திரா (அணித்தலைவர்), வி.ரஜீவ்குமார் (அணி உபதலைவர்), ஆர்.கிருஷ்ணராஜா, நி.அகிலன், கே.றோகான், எஸ்.குணதாஸ், எஸ். உமாநாத், ஏ.ஜசிந்தன், ரி.கஜேந்திரன், வி.மணிவாணன், கே.ராஜதீதன், ரி.பிரகாஷ், ஏ.துஷியந்தன், ஆர்.வினோதன், ஆர்.வைகுந்தன்.

32ஆவது சதம் குவித்தார் ஸ்ரீவ்வோ

பங்களாதேஷுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போது ஆஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ்வோ தனது 32 ஆவது டெஸ்ட் சதத்தைப்பெற்றார்.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தியாவின் சுனில் கவாஸ்கருக்கு அடுத்து (34) ஆகக் கூடுதலான சதங்களைப் பெற்றவீர் எனும் பெருமையை இவர்பெற்றார்.

ஆஸ்திரேலிய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி கெய்ன்ஸ் நகரில் நடைபெறுகிறது.

அப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 295 ஓட்டங்களைப் பெற்றது.

ஆஸ்திரேலிய அணியின் பந்து வீச்சாளர்களில் ஸ்டுவர் மெக்கில் 77 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஜேஸன் ஜிலெஸ்பி 57 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

சனிக்கிழமை காலை ஆஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்தது. ஆரம்பத்துடுப்பாட்டவீரர் ஜஸ்ரின் லாங்கர் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். எனினும், மத்தியூ, ஹைடன், ரிக்கி பொன்ரிங் ஆகியோர் அரைச்சதம் குவித்தனர். பின்னர் டெரன் லெமன், ஸ்ரீவ்வோ, மார்ட்டின் லவ் ஆகியோர் சதம் குவித்தனர்.

லெமன் 207 பந்து வீச்சுக்களில் 22 பௌண்டரிகள் உட்பட 177 ஓட்டங்களைப் பெற்றார். ஸ்ரீவ்வோ 291 பந்து வீச்சுக்களில் 22 பௌண்டரிகள் உட்பட ஆட்டமிழக்காமல் 156 ஓட்டங்களைப் பெற்றார்.

மார்ட்டின் லவ் 154 பந்து வீச்சுக்களில் 7 பௌண்டரிகள் உட்பட 100 ஓட்டங்களைப் பெற்றார்.

லவ் சதம் குவித்தவுடன் ஆஸி அணி தனது துடுப்பாட்டத்தை நிறுத்திக்கொண்டது. அப்போது அவ்வணி 4 விக்கெட் இழப்பிற்கு 556 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பங்களாதேஷ் அணி நேற்றுமுன்தினம் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது.

மரண அறிவித்தல்

திருமதி சரஸ்வதி சிவஞானசுந்தரம் (லாலாம்மா)

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மட்டுவிலை வசிப்பிடங்களாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிவஞானசுந்தரம் 27.07.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சித்தவைத்தியர் சிவஞானசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் ப்ரபன், காலஞ்சென்ற அசோகன் மற்றும் ஜயந்தன், அனுஜன், ஜகேசன் ஆகியோரின் அருமைத் தாயாரும் அமிர்தமிப்பிள்ளை, கமலாதேவி, பொன்னுப்பிள்ளை, ஏரம்பநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பராசக்தி, சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் யாழ்விழியின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2003) புதன்கிழமை மாலை 3.30 மணியளவில் சோடாக்கடை ஒழுங்கை, ஊரிக்காடு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊறணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.நிர்த்தனசுந்தரம்.
(20325) (31-30-12-)

சோடாக்கடை ஒழுங்கை,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய மேஜர் சொனி அவர்களின் அன்புத் தாயாரான

திருமதி சிவஞானசுந்தரம் சரஸ்வதி

அவர்கள் 27.07.2003 இல் காலமானதையிட்டு துயருறும் அவரது நெருங்கிய உறவுகளுக்கும் அன்புள்ளங்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்; கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

(20826) - குடும்பத்தினர்.

நாற்றுக்கள் உற்பத்தியில் நாற்றுமேடைகளின் பங்கு

பயிர் வேளாண்மையில் அதிக விளைச்சலைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு காலாகாலம் பல புதிய தொழில்நுட்பங்கள் கைகொடுத்து வருகின்றன. விளைச்சலை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகளில் நாற்றுமேடைகள் மூலம் நாற்றுக்களைப்பெற்று நடுதலும் ஒரு பிரதான அம்சமாக உள்ளது. முறைப்படி தொழில்நுட்பங்களைப் பின்பற்றினால் நாற்றுற்பத்தி சிறப்படைவது காரணமாகக் கூடியவிளைவும் வருமானமும் திருப்தியும் உண்டாகும்.

"நாற்று" என்பது தாவரங்களை இளம் பெருக்குதற்பொருட்டு அவற்றின் இலிங்க உறுப்பாகிய வித்தை அல்லது பதியப்பகுதிகளை முளைகொள்ளச் செய்வதனால் உண்டாகி வளர்கின்ற இளந்தாவர நிலையைக் குறிப்பதாகும்.

'நாற்றுமேடை' என்பது புதிய தாவரத்தை இளமை நிலையில் வெளித்தரையில் நடுகை செய்யும் வரை வித்துக்களை அல்லது பதியப்பகுதிகளை முளைகொள்ளச் செய்யவும் சீரும் சிறப்புமான ஆரம்ப வளர்ச்சியைப் பெறவும் அமைக்கப்படுகின்ற ஒரு தளம் (சாதனம்) ஆகும். பிள்ளைகளை இளமையிலேயே சீராகவும் ஆரோக்கியமாகவும் பாதுகாத்து வேண்டிய நற்பழக்கங்களுடனும் வளர்த்தெடுப்பது போன்று தாவரங்களையும் இளமையில் வளர்த்தெடுக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, நாற்றுமேடையின் நோக்கம் என்னவென்பது இதனால் புலனாகின்றது.

நாற்றுமேடை வகைகள்

நாற்றுமேடைகள் வேறுபட்ட பல அமைப்புக்களையும் இயல்புகளையும் கொண்டுள்ளன. அவற்றை இரு பெரும் பிரிவுகளுள் அடக்கிக் கூறலாம். அவையாவன:

1. நிலநாற்றுமேடை.
2. நாற்றுச்சாடிகள்.

நிலநாற்றுமேடையை தரை நாற்றுமேடை, சேற்றுநில நாற்றுமேடை என இருவகைகளாகக் கூறலாம். சேற்றுநிலநாற்றுமேடை என்பது நெல் நாற்றுக்களை உற்பத்தி செய்யும் சாதனமாக உள்ளது. தரைநாற்றுமேடையில் உயர்நாற்றுமேடை, தாழ் நாற்றுமேடை, மணல்நாற்றுமேடை என்பனவும் மற்றும் நெரிபோகோ நாற்றுமேடை, டபொக் நாற்றுமேடை ஆகியனவும் அடங்குகின்றன.

நாற்றுச்சாடிகளானவை நிரந்தரச் சாடிகள், தற்காலிகச் சாடிகள் என இருவகைகளாக உள்ளன. நிரந்தரச் சாடிகளைப் பெட்டிச் சாடிகள், மண் (களிச்)சாடி, சிமெந்துச்சாடி, பீங்கான் சாடி என்பன உள்ளன. தற்காலிகச் சாடிகளாக பொலித்தீன்சாடி, சிரட்டைச் சாடி, முங்கிற்சாடி, தகரச்சாடி, இலை வகைச்சாடி, தென்னம்மட்டைச்சாடி எனப் பல சாடிகள் உள்ளன.

நன்மைகள்

நாற்றுக்களை உற்பத்தி செய்து கொள்வதால் பின்வரும் அனுகூலங்கள் கிடைக்கின்றன.

1. நோய்த்தாக்கமற்ற வீரியமான நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்தளவு வித்துச் செலவை கொண்டுள்ளன.
3. வெளித்தரையில் சீரும் சிறப்புமான பயிர் வேளாண்மையை மேற்கொள்ளலாம்.
4. வெளித்தரையைத் தயார் செய்து கொள்ளப் போதிய அவகாசம் கிடைக்கும்.
5. நீர், பசளை, களைகொல்லி, பூச்சிகொல்லி என்பனவற்றின் அளவும் செலவும் குறைவடையும்.
6. நாற்றுக்களை இலகுவாகப் பராமரிக்கலாம்.
7. வர்த்தக ரீதியான ஒரு தொழிலாகவும் இதனை மேற்கொள்ளலாம்.
8. இடத்துக்கிடம் தூக்கிச்செல்லலாம் - முழுதாக அல்லது பகுதியாக விற்பனை செய்யலாம் தூக்கிச் சென்று பாதுகாக்கலாம். (நாற்றுச்சாடிகள் மற்றும் நெரிபோகோ, டபொக் போன்றன மட்டும்)

நாற்றுற்பத்திக்கான தாவரங்கள்

1. நிலநாற்றுமேடை.
2. நாற்றுச்சாடிகள்.

நிலநாற்றுமேடையை தரை நாற்றுமேடை, சேற்றுநில நாற்றுமேடை என இருவகைகளாகக் கூறலாம். சேற்றுநிலநாற்றுமேடை என்பது நெல் நாற்றுக்களை உற்பத்தி செய்யும் சாதனமாக உள்ளது. தரைநாற்றுமேடையில் உயர்நாற்றுமேடை, தாழ் நாற்றுமேடை, மணல்நாற்றுமேடை என்பனவும் மற்றும் நெரிபோகோ நாற்றுமேடை, டபொக் நாற்றுமேடை ஆகியனவும் அடங்குகின்றன.

நாற்றுச்சாடிகளானவை நிரந்தரச் சாடிகள், தற்காலிகச் சாடிகள் என இருவகைகளாக உள்ளன. நிரந்தரச் சாடிகளைப் பெட்டிச் சாடிகள், மண் (களிச்)சாடி, சிமெந்துச்சாடி, பீங்கான் சாடி என்பன உள்ளன. தற்காலிகச் சாடிகளாக பொலித்தீன்சாடி, சிரட்டைச் சாடி, முங்கிற்சாடி, தகரச்சாடி, இலை வகைச்சாடி, தென்னம்மட்டைச்சாடி எனப் பல சாடிகள் உள்ளன.

நன்மைகள்

நாற்றுக்களை உற்பத்தி செய்து கொள்வதால் பின்வரும் அனுகூலங்கள் கிடைக்கின்றன.

1. நோய்த்தாக்கமற்ற வீரியமான நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. குறைந்தளவு வித்துச் செலவை கொண்டுள்ளன.
3. வெளித்தரையில் சீரும் சிறப்புமான பயிர் வேளாண்மையை மேற்கொள்ளலாம்.
4. வெளித்தரையைத் தயார் செய்து கொள்ளப் போதிய அவகாசம் கிடைக்கும்.
5. நீர், பசளை, களைகொல்லி, பூச்சிகொல்லி என்பனவற்றின் அளவும் செலவும் குறைவடையும்.
6. நாற்றுக்களை இலகுவாகப் பராமரிக்கலாம்.
7. வர்த்தக ரீதியான ஒரு தொழிலாகவும் இதனை மேற்கொள்ளலாம்.
8. இடத்துக்கிடம் தூக்கிச்செல்லலாம் - முழுதாக அல்லது பகுதியாக விற்பனை செய்யலாம் தூக்கிச் சென்று பாதுகாக்கலாம். (நாற்றுச்சாடிகள் மற்றும் நெரிபோகோ, டபொக் போன்றன மட்டும்)

நாற்றுற்பத்திக்கான தாவரங்கள்

1. வித்துக்கள் தாவரங்களுக்குரியவை விதைகள் விலங்குகளுக்குரியவை எனக் கருதுதல் சிறந்தது. வித்துக்களை விதைகளை எனவும் கூறலாகாது. பழக்கதோசத்தை (பிழையானதை) திருத்திக்கொள்ள வேண்டும்.

விதை, கருவி = விதைக்கப் பயன்படுத்தும் கருவி

(விதைக்கருவி அல்ல)

விதை கிழங்கு = விதைக்க பயன்படும் கிழங்கு

(விதைக்கிழங்கு அல்ல)

வித்துச் சிகிச்சை - தாவரங்களில் வித்துக்களில் செய்யப்படுவது.

விதைச்சிகிச்சை - விலங்குகளின் வித்துக்களில் செய்யப்படுவது.

வித்துக்கள் விதைக்கப்படுவதால் விதை என்ற ஏவல் வினைச்சொல்லால் காலப்போக்கில் 'வித்து' என்பது 'விதை' என்றும் மருவிவிட்டது. வித்து விதை என்பது வித்தினை விதைத்தல் செய் என்பதாகும் அல்லவா?

தரை நாற்று மேடைகள்

உயர் நாற்றுமேடை அமைத்தல்

இடத்தெரிவு:

பின்வரும் அம்சங்களைக் கருத்திற்கொண்டு நாற்றுமேடை அமைத்தலுக்கான இடத்தைத் தெரிவு செய்ய வேண்டும்.

1. மேட்டு நிலமாகவும், மழைக் காலங்களில் நீரினால் மூடப்படாமலும் சிறந்த நீர்வடிப்பைக் கொண்டதாகவும் கற்கள், பரல்கள் அற்றதாகவும்



குள் இல்லாதிருப்பதையிட்டு வீரிய மற்றதாகி வெளித்தரையில் நிலைகொள்ளமாட்டா என்பதனாலாகும். இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காகச் சில தாவரங்களில் இலைகளை (ஒருபகுதி) அகற்றி நடுவதும் உண்டு. உ-ம் நெல் நாற்று, வாழைக்குட்டி அதாவது பிடுங்கி நடுதலைச் சகிக்கும் அற்றவுள்ள நாற்றுக்களை (பெரும்பாலும் சிறிய இலை உள்ளவற்றை) தரக்கூடிய வித்துக்களே நிலநாற்று மேடைகளில் நாற்றுற்பத்தி செய்யப்படுகின்றன எனலாம்.

கரட், நிலத்தின் கீழ் சீரிய கூம்பு வடிவில் கிழங்கைப்பெறும் நோக்கத்தின் காரணமாக அது நாற்றாக உற்பத்தி செய்யப்பட்டு நடப்படுவதில்லை. நெல், குரக்கன் போன்ற பயிர்கள் நாற்றுக்களாக நடப்படுவதுமுண்டு. நேரடியாக வெளித்தரையில் விதைக்கப்படுவதும் உண்டு. சோளம் நேரடியாக வெளித்தரையில் விதைக்கப்படும்.

உருளைக்கிழங்கு, மோதகவள்ளி, இராசவள்ளி, வெங்காயம், பூடு போன்ற இயற்கைப் பதியப்பகுதிகள் நாற்றுற்பத்தி செய்யப்படாது நேரடியாக வெளித்தரையில் விதைக்கப்படுவன ஆகும். பெரும்பாலும் செயற்கைப் பதியப்பகுதிகளே நாற்றுற்பத்தி செய்யப்படுவனவாக உள்ளன.

குறிப்பு: பின்வருவனவற்றை கவனத்தில் கொள்க.

1. மண்ணுள் மறையும் படி இடுபவற்றை விதைப்புச் செய்தல் எனவும், ஒருபகுதி மண்மேல் தெரியும்படி இடுபவற்றை நடுகை செய்தல் எனவும் கருதுதல் சிறந்தது.

உள்ள தரையைத் தெரிவுசெய்ய வேண்டும். மணற்பாங்கான இருவாட்டி மணல் மண் விரும்பத்தக்கது. இதனால், வேர்ச்சேதமின்றி நாற்றுக்களைப் பிடுங்கமுடியும்.

2. மண்ணரிமானம் ஏற்பட இயலாத இடமாக இருத்தல் வேண்டும்.
3. சூரியஒளி சிறப்பாகக் கிடைக்கக் கூடிய இடமாக இருத்தல் வேண்டும்.
4. கட்டுப்படுத்துவதற்குச் சிரமமான களைகள் அற்ற இடமாக இருத்தல் வேண்டும்.
5. நோய்த்தாக்கப் பீடைகளின் தாக்கம் அரிதான இடமாக இருத்தல் வேண்டும். ஒரே குடும்பத் தாவரங்களைத் தொடர்ச்சியாகப் பயிரிடாத இடமாக இருத்தல் நன்று.
6. மிக அண்மையில் நீர்வசதி கிடைக்கக் கூடிய இடமாக இருத்தல் வேண்டும்.
7. நாற்றுமேடையாளரின் இருப்பிடத்திற்கு அண்மையில் இருத்தல் வேண்டும்.
(8) பாதுகாப்புள்ள இடமாக இருத்தல் வேண்டும்.
(9) வர்த்தக நோக்கிலான முயற்சியாயின் சந்தை வசதியும் போக்குவரத்து வசதியும் உள்ள இடமாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- மாணவர் தமது பாடசாலைத் தோட்டத்திலும் வீட்டுத் தோட்டத்திலும் நாற்றுமேடைக்கான இடத்தைத் தெரிவுசெய்வதில் செயற்பாடு கொள்ளவேண்டும்.

தரை பண்படுத்துதல்

முதற்கண் தரையிலுள்ள களைகளை வெட்டி அகற்றி 20 செ.மீ.-25செ.மீ ஆழத்தில் மண்ணைக் கொத்திப்புரட்ட வேண்டும். அவ்வேளையில் மண்ணிற் காணப்படுகின்ற பாதகமான பொருள்களாகிய கற்கள், பரல்கள் நிலக்கீழ்த் தண்டுகள், பெரும் வேர்கள், போத்தல், ஓடுகள், பொலித்தீன்பிளாஸ்டிக் பொருள்கள் போன்றவற்றை நீக்கிவிட வேண்டும். கொத்திப் புரட்டிய மண்ணை மீண்டும் உடைத்தும் கொத்தியும் மண்ணை நன்கு தூள்ஷையாக்கவேண்டும்.

மேடை அமைத்தல்

நன்கு பண்படுத்திய தரையில் ஒவ்வொரு மேடையும் 90-100 செ.மீ. அகலத்திலும் 10-12 செ.மீ. உயரத்திலும் விரும்பிய நீளத்திலும் அமைக்கப்படலாம். மட்டமான தரையாயின் நீளம் 10மீற்றருக்கு மேலும் அமையலாம். நாற்று மேடையில் பிற்கவனிப்புக்கருமங்களை ஆற்ற வசதியாக மேடைகளின் அகலம் ஒரு மீற்றருக்கு மேற்படாதிருப்பதும், மேடைகளுக்கிடையில் நாலாபுறமும் 30-45செ.மீ. இடைவெளி இருத்தலும் வேண்டும். இம் மேடையிடைவெளிகள் வடிகாலாகவும் அமைகின்றன. மேடைகளின் உயரப்பக்கங்கள் சிறிது உட்காய்வாக அமுக்கி அமைக்கப்படுதல் நன்று. *(மிகுதி அடுத்த வாரம்)*

வாசகர் திருமுகம்

ஆடியபாத வீதி மீது அதிகாரிகளுக்கு கோபமா?

நல்லூர் ஆடியபாதம் வீதியில் கல்வியங்காடு சந்தி முதல் நாயன்மார்கட்டு வரையான பகுதி மிக மோசமாகச் சேதமடைந்து பல் ஆண்டுகள் ஆகிவிட்டன. யாழ். மாநகரசபைப் பகுதியிலேயே நீண்டகாலம் கவனிப்பாரின்றி சேதமடைந்து உருத்தெரியாமல் கிடக்கும் வீதி இதுவாகத்தான் இருக்கும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மாநகரசபையை நிர்வகித்தபோதும் சரி, அதற்கு முன்னர் ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ் சபை இருந்த காலப்பகுதியிலும் சரி இந்த வீதியைப் புனரமைக்க நிதி ஒதுக்கப்படவில்லை. இந்த வீதியைத் திருத்துமாறு கோரிக்கைகள் எழுந்தபோது கூட்டணி நிர்வாகம் சரியில்லை என்று சாக்குப்போக்கு கூறப்பட்டது. இப்போது அரசியல் கலப்பின்றி மாநகரசபை சுயாதீனமாக இயங்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்றாலும் இந்த வீதி விடயத்தில் மட்டும் மாநகரசபை நிர்வாகம் பழைய நிர்வாகம் போன்றே வளாவிருப்பது ஏன் என்று தெரியவில்லை.

ஆடியபாத வீதி மீது அதிகாரிகளுக்கு என்ன கோபம்? மாநகர ஆணையாளர் பகிரங்க விளக்கம் தருவாரா?

நல்லூர். **எம்.சண்முகநாதன்**

இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாணவர், ஆசிரியர் ஆர்வமில்லை

21.07.2003 திங்கட்கிழமை உதயனில் வெளியான 'அருகிவரும் வாசிப்புப் பழக்கம் யாழ். கல்வி வளர்ச்சிக்கு சவால்' என்ற கட்டுரை வாசித்தேன். திரு.சு.சிவநேசராசன் என்பவரால் எழுதப்பட்ட அக்கட்டுரை தொடர்பாக பின்வரும் விடயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி வளர்ச்சிக்கு சவாலாக உள்ள விடயங்கள் களையப்பட வேண்டியதென்பது உண்மையே. மாணவர்கள், ஆசிரியர்கள் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் ஈடுபட ஆர்வம் காட்டாததும் யாழ்ப்பாணத்தின் கல்வி வீழ்ச்சிக்கு காரணமெனலாம். ஏனெனில், இணைப்பாட விதானச் செயற்பாடுகளின் ஊடாக மாணவர் பலதரப்பட்ட அனுபவங்களை பெறுவாய்ப்புக்கள் உள்ளன. இவை அவர்களின் கற்றலில் பெருந்துணை புரியக்கூடியன.

மேலும் கட்டுரை ஆசிரியர் அன்றைய பகிடிவதைகள் எவ்வாறு நகைச்சுவை உணர்வுடன் செய்யப்பட்டன என செங்கை ஆழியானின் 'கங்கைக் கரையோரம்' உணர்த்துகின்றது என புளகாங்கிதம் அடைகின்றார். ஆனால், அன்று 1960களில் நகைச்சுவை உணர்வுடன் காணப்பட்ட பகிடிவதைகளே இன்று 2000இல் படுகொடுமைகளாக மாறியுள்ளன. அதன் பரிணாம வளர்ச்சியே இன்றையநிலை. பகிடியில் எப்படி வதை இருக்கமுடியும்? பகிடிவதை என்பதே சட்டவிரோதம்.

மற்றும் கட்டுரை ஆசிரியர், "'செங்கை ஆழியானின் 'கிடுகுவேலி' நாவல் ஈழத்தமிழரின் பண்பாடு கிடுகுவேலிக் கலாசாரத்தில் எவ்வாறு பேணப்பட்டதென்பதை படம் பிடித்துக் காட்டுகின்றது" என்கிறார். ஆனால், 'கிடுகுவேலி'யில் யாழ்ப்பாண இளைஞர் தமது சகோதரிக்காக உழைக்க வெளிநாடு செல்வதையும் இதனால், தனது மனைவியருடன் முரண்படாது சமாளிப்பதையும் வெளிநாட்டுப் பணத்தால் யாழ்ப்பாணப் பழக்கவழக்கங்கள் மாற்றமடையத் தொடங்குவதையுமே காட்டுகின்றது. அன்றைய யாழ்ப்பாணப் பண்பாட்டை அறிய செங்கை ஆழியானின் வேறு நாவல்களையும் செ.யோகநாதனின் 'நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே' செம்பியன் செல்வன், கே.டானியல் போன்றோரின் நாவல்களை வாசிப்பது பயன்தரும்.

வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்த நூலகங்கள் அமைக்கப்படுவதையும், பல நூல்களையும் வாசிக்க வேண்டுமென கட்டுரை ஆசிரியர் குறிப்பிடுகிறார். பொதிகையிலும் சன் ரீவியிலும் தொடர்நாடகங்களையும் திரைப்படங்களையும் பார்க்கும் எங்கள் யாழ்ப்பாணப் பெற்றோரின் பிள்ளைகளிடம் வாசிப்புப் பழக்கத்தை எதிர்பார்ப்பதெவ்வாறு?

'நாயகி வாசா" **தேவ. முகுந்தன்.**
15, 3ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை.

குழப்பாமல் விலகியிருக்கட்டும்!

ஈழத்தமிழர்களின் உரிமை பெற முன்வந்த ஆயுதக்குழுக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த இந்தியப்பிரதமர் இந்திராகாந்தியை சீக்கியர்கள் சுட்டுக் கொன்றார்கள். அகாலிதள் இயக்கம் பழிவாங்கியது. தனது வழிக்கு வராதபடியால் அமெரிக்கர்களே செய்வித்தார்கள் என்று ஊகங்கள் வெளிப்பட்டன. ஆனால், இந்தியா சீக்கியர்களை அடக்கி ஒதுக்கவுமில்லை. அமெரிக்காவை கண்டித்து ஒத்துழைக்க மறுக்கவுமில்லை.

என்றாலும் பிரபாகரனை பலாத்காரமாக ஜே.ஆரை பெங்களூரில் சந்திக்க வைக்கவும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்கவைக்கவும் முயன்றவர் ராஜீவ். அமைதிப்படை என்ற பெயரில் பலரை கொன்றும், கர்ப்பிணிப்பெண்களைக்கூட பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியும் பல கொடுமைகளை செய்யவிட்டவர் ராஜீவ். மாகாணசபை தேர்தலில் E.P.R.L.F. வெல்ல வேண்டுமென்பதற்காக, மற்றவர்கள் போட்டியிடுவதை தடுக்க யாராவது சாதாரணமாக 1000 ரூபா விற்கு மேல்கொண்டு சென்றவர்களை நியமன நேரம் முடியும் வரை கச்சேரிப் பக்கமே போகவிடாமல் தடுத்து வைத்து தாங்கள் விரும்பியவர் தெரிவுசெய்யப்பட உதவினார்கள். ஆனால், வரதராஜப்பெருமாள் (முதலமைச்சர்) போக்குவரத்து, முழுப்பொறுப்பையும் மாகாணசபையிடம் ஒப்படைக்கும்படி கேட்டதற்கு மத்திய அரசாங்கம் மறுத்தது. இத்துடன் ஒப்பந்தத்தின் ஓட்டை வெளிப்பட்டது. இவ்வளவுக்கும் பொறுப்பு ராஜீவ் - டிக்ளிற் சோடியின் தான தோன்றித்தன போக்குத்தான்.

ஒப்பந்தம் கைச்சாத்திட முன்பே அணிவகுப்பில் நின்ற ஒரு சிங்கள சிப்பாய் தான் வைத்திருந்த துவக்கின் கைப்பிடியால் (BUTT) ராஜீவின் பிடரியில் அடிக்க முயன்றார். இதை அவரின் அதிதனிப்படைப்பாய கவனிப்பினால் தப்பித்துக்கொண்டார். இதன் 'வீடியோ' படத்தை பார்த்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த அடி குறிபார்த்துபட்டிருந்தால் மற்றவர்களுக்கு ராஜீவை கொலை செய்ய சந்தர்ப்பம் கிடைத்திருக்காது. இதற்குக் கணகூடான சாட்சியாக அந்தநாள் இலங்கை அதிபர் ஜே.ஆர். பக்கத்திலேயே இருந்தார். இதற்காக சிங்களவருக்கோ இலங்கைக்கோ இந்தியா என்ன தண்டனை வழங்கியது?

இப்படிப்பட்ட கோழை இந்தியா ஒடுக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்டு நசுக்கப்பட்ட ஒரு சிறுபான்மை இனமாகிய ஈழத்தமிழ் மக்கள் விமோசனத்தை நாடும் போது குழப்ப சதி செய்கிறது. இது நியாயமா?

ஆயுதம் ஏந்தியவர்கள் குழப்பக்காரர்கள் என்பது ஒரு பொது நிலைப்பாடு. ஆனால், அந்த ஆயுதப்போராட்டத்தான் சிங்கள அரசை ஒரு முன்னேற்றகரமான பேச்சுக்கு கொண்டு வந்துள்ளது. இதற்கு முன் 50 வருட அவநம்பிக்கை சமாதான வழிப்போராட்டங்களெல்லாம் ஏமாற்றுக் கதையாக முடிந்ததென்பதை உலகமே அறியும்.

ஈழத்தமிழர்கள் சுய உரிமையுடன் வாழ உதவ முடியாதுவிட்டாலும் பேச்சுக்களை குழப்பாமல் விலகியிருந்தாலே ஈழத்தமிழினம் என்றென்றும் இந்தியாவுக்கு தனது நன்றிக்கடனைச் செலுத்தும்.

கா.கணேசரட்ணம்

ஓம் சக்தி

மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயம்

கிளானை - அல்வாய்

ஆடிப்பூரத் திருவிழா

01 - 08 - 2003 வெள்ளிக்கிழமை

மேற்படி விழா காலை 6 மணி தொடக்கம் 10 மணிவரை
- மக்கள் அன்னைக்கு பாலபிடேகம்
- யாகம்
- கஞ்சி படைத்தல்
- அன்னதானமும் இடம்பெறும்.

10.30 மணிக்கு
நண்பகல் 12 மணிக்கு
பிற்பகல் ஒரு மணியளவில்

மாலை 6 மணி தொடக்கம் மறுநாள் காலை வரை
- ஆன்மீக சொற்பொழிவு, பட்டிமன்றம்,

மஹாரகானம், காத்தவராயன் நாடகம் என்பனவும் நடைபெறும்.

(20819)(21-11-15-19) - ஆலயமன்ற நிர்வாகம்.

வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி

சோலைவரி ஆதன மதிப்பீடு - புத்தூர் உப அலுவலகம்

புத்தூர் உப அலுவலக எல்லைக்குட்பட்ட ஆதனங்கள் யாவும் புதிதாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியுள்ளதால், அதற்காக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விலை மதிப்பீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்கள் கூறுவிலை எதிர்வரும் 10.08.2003ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். மேலதிக விவரங்கள் யாவும் காரியாலய நேரத்தில் மேற்படி காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ இப்பிரதேச சபைக்கு முழு உரிமை உண்டு.

க.வெங்கடாசலம்,
செயலாளர்,
வலி.கிழக்கு பிரதேச சபை.

வலி.கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
28.07.2003.

வலி.கிழக்கு பிரதேச சபை. நீர்வேலி

(சி-29178) (21-11-15-26)

31ஆம் நாள் நினைவு தினம்

01-07-2003 இல் அமரரான

திருமதி புவனேஸ்வரி (மலர்) வீரசிங்கம்

அன்புள்ளங்களே!

30-07-2003இல்
நேற்றிருந்தாள் நேசித்தாள் நெஞ்சுருக விட்டகன்றாள்
போற்றுகுணத் தாயாரின் முப்பத்தோராம் நாள் நினைவு
சுற்றம் உறவு நட்பு சேரவே நிகழ்கிறது
அன்றைய நாள் நிகழ்வுகளில் அனைவரையும் வரவேற்று
வரவுங்கள் மதியத்து உணவருந்திச் செல்க என
பேருள்ளக் கருவோடு அழைக்கின்றோம்!

அன்னாரின் குடும்பத்தினர்.

அந்திரான்,
கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

(சி-29176)(21-11-15)

---

31 ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 08 - 04 - 1932

மறைவு 29 - 06 - 2003

திருமதி சுப்பிரமணியம் நாகரத்தினம்

அன்புமொழி பேசி எமை ஆதரவாய் அரவணைத்து மறைந்திட்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம். எங்கள் அன்பு அன்னையின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்து கலந்து கொண்டவர்களுக்கும் பல்வேறு வகைகளில் எமக்கு உதவிகள் நல்கியோருக்கும் எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (29.07.2003) செவ்வாய்க்கிழமை எங்களின் இல்லத்தில் இடம் பெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை புதியபோசனம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
சு.சிறிரங்கநாதன் (சுவிஸ்)
அம்பிகா (மகள்)
T.P.No: 0792721383

சுகுணபுரநவரெத்தினம் (செல்லப்பா - மகன்)
T.P.No: 077 60 11923
கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(20818) (21-11-25)

கல்விக்கருத்தரங்கு

'யாழ். மாவட்டக் கல்வித்தரத்தின அண்மையபோக்கு' தொடர்பான கல்விக் கருத்தரங்கொன்று நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தின் ஆதரவுடன் நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் றொட்டேரியன் கே.சுரேந்திரன் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக கல்வியியல் துறை பேராசிரியர் ம.சின்னத்தம்பி, யூனியன் கல்லூரி அதிபர் சு. புண்ணியசீலன், கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர் அருண்மாஸ்டர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆசிரிஸ கந்தமூர்த்தி, யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி பா. தனபாலன், பலாலி ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்த எம்.இக்னேசியஸ் ஆகியோர் இக்கருத்தரங்கில் கருத்துரை வழங்குவர். (எ-152)

வரலாற்றுக்கே.....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலதி படையணி, கடற்புலிகளின் மகளிர் அணி ஆகியவற்றின் நடன நிகழ்வுகள், நாடகங்கள் என்பனவும் சாள்ஸ் அன்ரனி சிறுத்தைப் படையணி போராளிகள் வழங்கிய இடிக்கப்பட்ட இரும்புக் கோட்டை, சிந்து நடைக் கூத்து என்பனவும் அனைவரது பாராட்டையும் பெற்றன.

வெறும் ஆறு வயதே நிரம்பிய சிறுமி ஒருத்தி எழுச்சிப்பாடல் ஒன்றுக்கு மிகவும் அற்புதமாக நடனமாடினார்.

நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை களமுனைத்தளபதிகள், சிறப்புத்தளபதிகள் பலரும் மக்களுடன் மக்களாக இணைந்திருந்து நிகழ்வுகளை இரசித்தனர். இதனால் அந்த மக்களின் வெற்றிச் சந்தோஷம் இரட்டிப்பாகியதையும் அவதானிக்கமுடிந்தது.

முல்லைச் சமரின் பிரதான கட்டளைத் தளபதியாக இருந்த தீபன் உரையாற்ற எழுந்த போது மகிழ்ச்சிப் பிரவாகத்தினால் மக்கள் கூட்டம் கரகோசித்து மகிழ்ந்தது.

முல்லைமண் மீட்பிலே தலைவனுக்கு பக்கபலமாக நின்று படையணிகளை வழிநடத்திய தளபதி தீபன் தனது களமுனை அனுபவங்களை உரையாக்கினார். தான் நின்று பேசிக் கொண்டிருக்கின்ற இடத்திலே இரண்டு ஆட்லறிகள் மீட்கப்பட்டதாகவும், அவையே தொடர்ந்து வந்த ஏனைய சமர்களிலும் தமது படையணிகளுக்கு பெரும் பக்கபலமாக அமைந்தன என்றும் அவர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு படைமுகாம் தகர்ப்பு தாக்குதலில் பொதுமக்களின் நேரடிப் பங்களிப்பை தனது உரையில் மெச்சினார் மகளிர் தளபதி கேணல் விதுஷா.

அதனைத் தொடர்ந்து கடற்புலிகளின் மகளிர் படையணி போராளிகள் இருவர் "ராஜகோபுரம் எங்கள் தலைவன்..." என்ற பாடலுக்கு நடனம் ஆடினார்கள்.

அந்த போராளிப் பெண்களின் அருமையான நடனம் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

வரலாற்றுக்கே வரலாற்றை உணர்த்திய - போருக்கே போரியல் நிபுணத்துவத்தை கற்பித்த - உலக நிபுணத்துவத்தின் புருவங்களை உயர்வைத்த அந்த பெருந்தலைவனின் புகழைப் பாடிய அந்த புரட்சி கீதத்துக்கு நடனமாடிய அந்த வீர மகளிர் இருவரும் அங்கிருந்த மக்களின் ஒருமித்த பாராட்டுதல்களையும் கரகோஷ ஒலிகள் மூலம் பெற்றுக் கொண்டார்கள்.

தமது படையணியைச் சேர்ந்த நண்பிகள் நடனத்திற்காக மேடையில் ஏறிய போது ஏனைய கடற்புலிப் பெண் போராளிகள் மேடையின் முன்புறம் ஓடி வந்து அமர்ந்து கொண்டு உற்சாகம் கொடுத்து மகிழ்ந்ததையும் காண முடிந்தது.

இந்த நிகழ்வுகளுக்கிடையில் 'ஓயாத அலை'களின் மூலம் ஓயாது வெற்றிகளை பெற்றுக்கொடுத்த தமிழீழத்தின் பெருந்தலைவனுக்கு முல்லை மக்கள் வெற்றிக்கேடயம் ஒன்றை வழங்கினார்கள். தளபதி சூசை ஊடாக அந்தக் கேடயத்தை தேசியத் தலைவருக்கு அனுப்பி வைத்தார்கள் முல்லைமக்கள்.

முல்லையில் பெரும் வெற்றியைத் தந்துவிட்டு கல்லறைகளில் உறங்கிக் கொண்டிருக்கும் 340 மாவீரச் செல்வங்களின் நினைவுகளை அந்த வேளையில் மீட்டுப்பார்த்த போது இனம்புரியாத ஓர் இறுக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது.

அந்த மறவர்களுக்கு, அந்த நேரத்திலே பிரதி உபகாரமாக நாம் என்ன தான் செய்யப்போகின்றோமோ என்று மனம் ஏங்கிய போது அந்த ஏக்கத்தை இரு கண்களும் ஓரளவு தணித்துக் கொண்டன; தம்மிலிருந்து நீரை வெளியேற்றின... ✪

அமரர் கலாசூரி, கலாபூஷணம்

என்.கே.பத்மநாதன் அவர்களுக்கு

அஞ்சலி

இடம்: இளங்கலைஞர்மன்ற கலாமண்டபம்
காலம்: 30.07.2003 புதன் பி.ப. 4.00மணி

- ★ வேதபாராயணம்
- ★ தமிழ்மறை ஓதல்
- ★ நாதாஞ்சலி
- ★ மலரஞ்சலி
- ★ அருளுரைகள்
- ★ அஞ்சலி உரைகள்
- ★ பாமாலை

- இளங்கலைஞர் மன்றம்.

சட்டநாதர் வீதி,
நல்லூர்.

(20817) (21-11-15-26)

51ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
22 - 10 - 1940

கர்த்தரின் பாதத்தில்
09 - 06 - 2003

செல்வி

மருதர் கண்ணகை (றீற்றா)

(ஓய்வுபெற்ற தாதி, யாழ்.போதனா வைத்தியசாலை)

"பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டாரென்று அறியுங்கள்!" சங்:4.3

வை.கணபதிப்பிள்ளை
(மைத்துனர்)

268, பலாலி வீதி,
கந்தர்மடம்.

(20815) (21-11-15-26)

வீட்டுக்கிருத்திய அழைப்பு

29.06.2003 இல் சிவபதப்பேறடைந்த
எமது அன்புத் தெய்வமாகிய அன்னை

திருமதி

செல்லம்மா கணபதிப்பிள்ளை

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (29.07.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் மதிய போசனம் என்பனவற்றிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

26/2, 3ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

(20814) (21-11-1525)

துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியை

திருமதி மகேஸ்வரி நடேசபிள்ளை

(1979.01.01 - 1987.08.21)

அவர்களின் மறைவு எமக்கு ஆழ்ந்த கவலையைத் தருகின்றது. அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, துயருறும் அவரது குடும்பத்தவர் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

- பாடசாலைச் சமூகம்
யா/யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

(20820) (21-11-15-26)

மரண அறிவித்தல்கள்

சிவகுரு யோகராசா

இலந்தைக்காடு, சமரபாகுவைப் பிறப்பிடமாகவும் குறைடன்சிற்றி லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு யோகராசா அவர்கள் 27.07.2003 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் சிவகுரு சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும் மகேந்திரன் (புலோலி), தவனேஸ்வரி (இலந்தைக்காடு), தேவராசா (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சறோஜா (புலோலி), தருமரத்தினம் (இலந்தைக்காடு), மஞ்சுளா (டென்மார்க்) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. மகேந்திரன்
(சகோதரன்-புலோலி)

(சி-29177) (21-11-15)26)

ராணி செல்வரட்ணம்

யாழ்ப்பாணம், இரண்டாம் குறுக்குத் தெருவில் வசித்துவந்த காலஞ்சென்ற என்.செல்வரத்தினம் (Auditor) அவர்களின் அன்பு மனைவி ராணி செல்வரட்ணம் ஜூலை 26 ஆம் திகதி லண்டனில் காலமானார்.

அன்னார் செபராஜா, Dr.அருள்ராஜா (முன்னர் மூளாய் ஆஸ்பத்திரி), செல்வராஜா, தேவராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் காரைநகர் ஆலடியைச் சேர்ந்த கனகம்மா அம்பலத்தின் அருமைச் சகோதரியும் ஆவார்.

தகவல்:
Dr.எஸ். அருள்ராஜா (U.K.)

(சி-29179)(21-11-15-19)

41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னையின் மடியில் 28 - 02 - 1933

ஆண்டவன் பிடியில் 19 - 06 - 2003

அமரர் கந்தையா சிவராசா (சின்னக்கிளி)
(ஓய்வுபெற்ற பரிசாரகர். மாவட்ட வைத்தியசாலை நெல்லியடி)

கடல் அலையும் சிறிது ஓயலாம்
காற்றலையும் சிறிது ஓயலாம்
தீயலையும் சிறிது ஓயலாம்
ஆனால், எங்கள் மன அலைகள் என்றும்
உங்கள் நினைவலைகளில் ஓயாதிருக்கும்

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஐயப்பனின் பாதங்களில் எங்கள் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி!

எங்கள் குடும்பத் தலைவனின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (29-07-2003) செவ்வாயன்று எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி அன்னரத்தினம்,
பாசமிகு பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பிள்ளையார் கோவிலடி,
கட்டுவன் மேற்கு.

(சி-29189) (31-12-18)

முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 . 11 . 1930

மறைவு 08 . 08 . 2002

திருமதி பூபதி சதாசிவம்

திதி : ஆடி அமாவாசை

ஓராண்டு ஆயிற்றோ ஒளிவிளக்கு அணைந்து
தீராத வேதனையால் துவண்டே தவிக்கின்றோம்
மாறாத துன்பங்கள் மறைந்து போகாதே
ஆறாகக் கண்ணீர் அழுதே அஞ்சலிக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தற்காலிக முகவரி :
இணுவில் மேற்கு,
கந்தசுவாமி கோவிலடி, இணுவில். (20829) (31-12-18-17)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 31 . 10 . 1934

மறைவு 29 . 06 . 2003

எமது குடும்பத் தலைவர்

குமாரவேலு அருளம்பலம்

அன்பாகவும் பாசமாகவும் வாழ்ந்த உங்களை
எங்களால் மறக்கவே முடியாது - நீங்கள்
மறைந்தாலும் உங்கள் திருமுகம் எப்போதும்
எம் மனக்கண்களில் நிழலாடிக் கொண்டிருக்கும்!

இன்று (29.07.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் நண்பகல் மதியபோசனத்திலும் குடும்பசகிதம் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'மனோன்மணி வாசா'
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (20830) (31-12-18-17)

- அன்பு மனைவி,
பிள்ளைகள்.

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை29

யாழ். கல்வி வலயத்தின் ஆங்கில தின குழு நிகழ்வுகளில் பங்குபற்றும் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-10)

கலை மாலைப் பொழுது

யாழ்ப்பாணம்,ஜூலை29

திருமறைக் கலாமன்றம் வழங்கும் 'கலை மாலைப் பொழுது' என்னும் அரங்க நிகழ்வு நாளை புதன்கிழமை மாலை 7மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்பு நிகழ்ச்சிகளாக லண்டனில் இருந்து வருகை தந்துள்ள செல்வி அகல்யா புஸ்பராஜாவின் நடனமும் யாழ். புனித ஜேம்ஸ் மகளிர் மகாவித்தியாலய மாணவிகளின் 'சூரியன்கள் நிலவுகளாக' என்னும் நாடகமும், திருக்குடும்பக் கன்னியர் மட மகாவித்தியாலய மாணவிகள் வழங்கும் 'விடியலின் பிரசவம்' என்னும் நாடகமும் இடம்பெறவுள்ளன. (ஒ-8)

வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை29

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவியின் மர்ம மரணம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 12ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணை யாழ். நீதிமன்றத்தில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது இவ் வழக்கு விசாரணையை எதிர்வரும் 12ஆம் திகதிவரை ஒத்திவைத்த நீதிவான் இ.த.விக்னராஜா, சந்தேக நபரான பாடசாலை காவலாளியை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (ஒ-5)

சமய சந்நிதிகளில்

அல்வாய் வேலிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

உற்சவ காலங்களில் தினமும் மாலை 6 மணிக்கு சுப்பிரமணிய பராக்கிரமம் என்ற தலைப்பில் சைவப் புலவர் சி.கா.கமலநாதன் சமயச் சொற்பொழிவாற்றுவார். (ஒ-5)

* * *

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் இரண்டாவது ஆடிச் செவ்வாய் விழா இன்று செவ்வாய்க்கிழமை விஷேட பூசைகள் அபிஷேகங்களுடன் இடம்பெறவுள்ளது. (ஒ-86)

லஷ்சுமி சினிமா இணுவில்
சரத்குமார், மீனா, ரம்யாகிருஷ்ணன் நடித்த
பாறை
காட்சி நேரம்: 11.00,3.00,7.00 (மு.ப.)
(C29176) (12-12-18)

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜீன், கிரண், கவுண்டமணி நடித்த
புரசுராம் (நிலவு)
தினசரி காட்சி : 11.00, 3.00, (மு.நே.)
இன்றுமுதல் இரவு 7 மணிக்கு
The Art of War
(C29177) (12-12-18)

நிறைஞ்சமான் சங்கானை
விக்ரம், பிரியங்கா நடித்த
காதல் சடுகுடு (நிலவு)
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (மு.நே.)
THE MUMMY
தினசரி 8.45 இரவு.
(C29178) (12-12-18)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி (நிலவு)
தினசரி: 10.30,2.30,6.30,9.30.
(C29179) (12-12-18)

லிபேட்டி அச்சுவேலி
ராஜ்குமார், தேவயானி விவேக் நடித்த
தென்னாசிப்பட்டணம் (நிலவு)
தினசரி: 3.00, 7.00 மணி (புதிய நேரம்)
திரைக் கலை **CROUCHING TIGER**
11.00 மணிக்கு **HIDDEN DRAGON**
(C29169) (12-14-29) சிறந்த கராட்டிச் சித்திரம்.

JAFFNA SOCIAL ACTION CENTER

159,4th Cross Street, Jaffna. T.P. 222 3699

Vacancy for the post of Procurement Officer:-

Required Qualification

- Secondary Education
- Experience - Minimum of 2 years working experience in the fields of accounting and procurement
- Very good communication skill & loyalty in accounting field
- Applicant should have general aptitude to work with NGO.
- Age limit - between 22 - 40

Applications should be forwarded to co-ordinator, JSAC, #159,4th Cross Street, Jaffna on or before 5th of August 2003.

Co-ordinator,
JSAC.

(C-29185)(12-18-31)

மரண அறிவித்தல்கள்

தாமோதரம்பிள்ளை இராஜலிங்கம்

யாழ்ப்பாணத்தைப் (கொக்குவில்) பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை இராஜலிங்கம் (வேலாயுதம்) நேற்று (28.07.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மோகனேஸ்வரியின் அன்புக் கணவரும் ராஜ்மோகன்(லண்டன்), நந்தினி (ஆசிரியை, Brilliant Institute), லோஜினி (Sewa Lanka Faindation), யாழினி (Babby Travels) ஆகியோரின் தந்தையும் ஸ்ரீ ரங்கநாதன் (France) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், 591, காலிவீதி, கல்கிஸையிலுள்ள மகிந்தமலர்ச் சாலையில் அஞ்சலிக்காக இன்று (29.07.2003) செவ்வாய்க்கிழமை பி.ப 1 மணிதொடக்கம் 5 மணிவரையும் வைக்கப்பட்டு, நாளை (30.07.2003) புதன்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்றுப் பி.ப.4 மணியளவில் கல்கிஸை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பெறாமகன் - T. கண்ணன்
T.P: 0777-219676.

வீட்டு முகவரி:
No. 11, எதிர்வீர அவனியூ,
தெஹிவளை. (சி-29187) (31-12-18)

பொன்னம்பலம் ஆறுமுகம்

அரியாலையூர் முன்னாள் சிறைச்சாலை உத்தியோகத்தர் பொன்னம்பலம் ஆறுமுகம் நேற்றுமுன்தினம் (27.07.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கோவில்கந்தையா - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தில்லையம்பலம் பொன்னம்மா, தம்பிராசா வேதநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுசீலா, சுமதி (சுவிஸ்), சேகர் (பிரான்ஸ்), சுகுணா (பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்), ஸ்ரீதர் (நோர்வே), பாஸ்கரன் (பிரான்ஸ்), கௌரி (நோர்வே), பிரபாகர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் மகேந்திரராசா(சுவிஸ்), ராகினி (பிரான்ஸ்), அந்தோனிப்பிள்ளை (பனை அபிவிருத்திச் சபை), இந்திராணி (நோர்வே), அனுஷியா (பிரான்ஸ்), கருணாகரன் (நோர்வே), ஹேமலதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி சின்னத்துரை இராசமணி, சுப்பிரமணியம் கனகேஸ்வரி, V.K.சண்முகலிங்கம், திருமதி நல்லையா இராஜராஜேஸ்வரி, திருமதி குணரத்தினம் சறகுணவதி, V.K. ஈரசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2003) செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் 25/1, வைரவர் கோயில் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
V.K. சண்முகலிங்கம்
(மைத்துனர்).

திருமகள் வீதி,
அரியாலை. (20832) (31-12-18)

திருமதி நீருஜா வசீகரன்

பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வசீகரன் நீருஜா நேற்று (28.07.2003) திங்கட்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் கருணாகரன் வசீகரனின் அன்பு மனைவியும் திவானுசனின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் தெய்வநாயகி (பேபி) ஆகியோரின் அன்பு மருமகளும் பட்டாபிராம், கமலேஸ்வரியின் அன்பு மகளும் பாஸ்கரன், சிவாகரன் (சிவாஜி), காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் மாலா, லக்ஷி ஆகியோரின் மைத்துனியும் கிரிஜா, நிரோஜன், ரிஷிகேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரத்தினகோபால், கனகாம்பிகையின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2003) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
செ. இரத்தினகோபால்
(கோபால் ஆட்ஸ் - பேரன்).

இ.பட்டாபிராம் (ஆட்டிஸ்ட்)
04, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (20831) (31-12-18)

S.S. கந்தசாமி

(முன்னாள் முருகன் பேக்ஹவுஸ் உரிமையாளர்)

பங்குரு வீதி, வட்டு. தென்மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த S.S.கந்தசாமி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - வள்ளியம்மையின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவபாக்கியம், இராசலட்சுமி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சரவணபவானந்தன், சரஸ்வதி தேவி (சிங்கப்பூர்) ஆகியோரின் தந்தையும் சுப்பிரமணியம் (சிங்கப்பூர்), நாகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் கணேசானந்தன் (சிங்கப்பூர்), லோகேஸ்வரன் (கனடா), கனகாம்பிகை (கனடா), வரதராஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் துசிதா (கனடா), நிலானி (கனடா) ஆகியோரின் அருமைப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2003) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
ச. வரதராஜன்
(பேரன்).

பங்குரு வீதி,
வட்டு. தென்மேற்கு,
வட்டுக்கோட்டை. (சி-29190) (31-12-18)

இந்திய மீனவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லைக்குள் மீன்பிடித்துக்கொண்டிருந்த சமயம் இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்களது நான்கு றோலர்களும் கைப்பற்றப்பட்டிருந்தன. அவற்றில் இருந்த 20 மீனவர்கள் பருத்தித்துறை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். எனினும், றோலர் ஓட்டிகளான இவர்கள் நால்வரையும் தவிர ஏனையவர்கள் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்.

இவர்கள் நால்வர் மீதும் யாழ். உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதனால் இவர்கள் தொடர்ந்தும் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுதலை செய்வதற்கான முடிவை நீதிமன்றமே எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ம-ரி)

சின்மைடு மாதா யாத்திரைத் தலத்தில் கடை போடுபவர்களுக்கு!

ஆடி மாதம் 27 ஆம் திகதி முதல் ஆவணி 5 ஆம் திகதி வரை இடம்பெறும் திருவிழாவில் கடை போட விரும்புவோர் 01.08.2003 காலை 9.00 மணிக்கு மேற்படி ஆலயத்தில் இடம் பெறும் கூட்டத்திற்கு தவறாது நேரத்திற்கு வரவும்.

அருள்திரு. இராசேந்திரம் ஸ்ரலின்
பரிபாலகர்.

(ச-29184)(12-17-18-30)

இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 8மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188
(31-17-12-18-30) (யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) (20411)

யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தின் ஆதரவுடன் நடைபெறும்

கல்விக் கருத்தரங்கு

யாழ்.மாவட்ட கல்வித் தரத்தின் அண்மைய போக்கு

காலம் :நாளை (30.07.2003) புதன்கிழமை காலை 9.30 மணி
இடம் :ரதிலஷ்மி மண்டபம், ஆசிரிய கலாசாலை - கோப்பாய்
தலைவர்: Rtn. K. சுரேந்திரன்

கருத்துரை வழங்குவோர்

- திரு.ம.சின்னத்தம்பி
(கல்வியியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- திரு.ச.புண்ணியசீலன்
(அதிபர், யா/யூனியன்கல்லூரி, தெல்லிப்பழை)
- திரு.அருணமாஸ்டர்
(கல்விக் கழக துணைப் பொறுப்பாளர்)
- திரு.ஆ.சிறிஸ்கந்தமூர்த்தி
(அதிபர் – ஆசிரிய கலாசாலை, கோப்பாய்)
- திரு.பா.தனபாலன்
(உப பீடாதிபதி – யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி, கோப்பாய்)
- திரு.எம்.இக்னேஸியஸ்
(விரிவுரையாளர் – ஆசிரியர் கலாசாலை, பலாலி)

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- யாழ்ப்பாண றோட்டறிக் கழகம்.

(ச-29188)(17-18-)

அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இங்குள்ள மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்துள்ளனர். ஆனால், இன்று தென்தமிழீழம் வீரம் செறிந்த பூமியாக பல படையணிகளுடன் திகழ்கின்றது. இங்குள்ள மக்கள் தேசியத் தலைவரின் சிந்தனைகளைப் புரிந்துகொண்டு கருணா அம்மான் தலைமையில் படையணிகளைக் கட்டி எழுப்புவது எமது நம்பிக்கையை மேலும் வலுப்படுத்துகிறது.

- இப்படி தமிழ்ச்செல்வன் கூறினார். (ஒ)

கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலிவ்சன் நோர்வே அரசின் பிரதிநிதிகளை சந்தித்து இதுகுறித்து பேச்சு நடத்துவார் எனவும் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

காஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சை பெற்றுவருகிறார்.

சமயலறையிலிருந்த 'காஸ் சிலிண்டரில்' கசிவு ஏற்பட்டு 'காஸ்' வெளியேறி அந்த அறையைச் சூழ்ந்திருந்ததாகவும், இதனை உணராத நீருஜா அடுப்பை பற்றவைக்க தீக்குச்சியை உரசியதும் அறையில் நிறைந்திருந்த 'காஸ்' தீப்பிடித்துக்கொண்டதாகவும் அதில் நீருஜா சிக்கி கடுமையான எரிகாயங்களுக்கு உள்ளானதாகவும் - உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

தீயில் சிக்கிய மனைவியின் அலறல் சத்தம் கேட்டு அங்கு ஓடிவந்த அவரது கணவர் தீயை அணைக்க முயன்றபோது, அவரது கைகளிலும் தீ பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

பலத்த எரிகாயங்களுக்கு உள்ளான நீருஜா உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆயினும், சிகிச்சை பயனளிக்காமல் நேற்று அவர் உயிரிழந்தார். (ஒ-4-88)

A/L DAY CLASS

BEACON யாழ்.

தமிழ்: தமிழிந்திரன்
அளவையியல்: எஸ்.எஸ்.மனோகரன்
இ.நாகரிகம்: ஸ்ரீஸ்
நாடகம்: சுதன்
கிறிஸ்தவம்: பிரபல ஆசிரியர்
புவியியல்: S.R. பாலா

(20759) (12)

ஆரம்பம்: 30.07.2003
புதன் காலை 7 மணி.

உடன் தேவை

கணனியில் தமிழ் ரைப்செற்றிங் தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. உடன் நேரில் வரவும்

ஸ்ரீ விநாயகர் வீடியோ,
வழுக்கம்பரை,
சுழிபுரம். (20827)

திருமறைக் கலாமன்றம் வழங்கும்

கலை மாலைப் பொழுது

(அரங்க ஆற்றுகைகள்)

நாடகங்கள்

'சூரியன்கள் நிலவுகளாக'
(யாழ்.புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்)

'விடியலின் பிரசவம்'
(யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம்)

சிறப்பு நிகழ்வாக
செல்வி அகல்யா புஸ்பராஜா (லண்டன்)
அவர்களின் நடனங்கள்

காலம் : நாளை (30.07.2003) புதன்கிழமை
நேரம் : மாலை 7.00 மணி.
இடம் : திருமறைக் கலாமன்ற அரங்கு.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். - திருமறைக் கலாமன்றம்.

(ச-29183)(31-17-18-30)

கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் **வசீகரன் (வசீ)** அவர்களின்
அன்பு மனைவி **திருமதி நீருஜா வசீகரன்**

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"சியானாஸ் புடைவையகம்"
யாழ்ப்பாணம்.

நண்பர்கள்
N.ரமேஸ், K.பிரபா,
T.ஜனகன்.

(20833) (31-17-12-18-30)

மரண அறிவித்தல்கள்

திருமதி சிவபாக்கியம் இராஜதுரை

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரான திருமதி சிவபாக்கியம் இராஜதுரை அவர்கள் நேற்று (28.07.2003) திங்கட்கிழமை இறைவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஆறுமுகம் அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி.இளையதம்பி அவர்களின் அன்பு மருமகளும் இ.இராஜதுரை அவர்களின் அன்புத் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, நாகேசு, பராசக்தி, தாமோதரம்பிள்ளை (ஆசிரியர்) மற்றும் பசுபதிப்பிள்ளை, கிருஷ்ணபிள்ளை, சற்குணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சர்வானந்தன் (பிரான்ஸ்), பவானி (பிரான்ஸ்), இந்திராணி (ஆசிரியை, யா/வைத்தீஸ்வராக் கல்லூரி), காலஞ்சென்ற பவானந்தன் மற்றும் ஜீவானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜகோபால் (பிரான்ஸ்), Dr.உருத்திரன்(யாழ்.போதனா வைத்தியசாலை), சிறிஸ்காந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜானி, துஷ்யந்தினி, சங்கவி, சாரங்கி, பவித்திரன், கேஷாஜினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.07.2003) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(20835) (29-12-17-18-30)

113, Palaly Road,
Kantharmadam.

தகவல்:
Dr.க.உருத்திரன் (மருமகன்)

செல்வி வினோஜி மகேஸ்வரன்

ஜேர்மனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி வினோஜி மகேஸ்வரன் கடந்த 27.07.2003 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் மகேஸ்வரன் - ஜெகதீஸ்வரி தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற பொன்னையா, பராசக்தி, இராலட்சுமி மற்றும் குட்டித் தம்பி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இ.பவானிதேவி, கு.கமலாதேவி, போ.விமலாதேவி (வண்ணார்பண்ணை), ஜெயபாலகரன், மனோகரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெயகரன் ஆகியோரின் அன்பு மருமகளும் ர.தயாநிதி, ந.சுதாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் பெறா மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.07.2003) புதன்கிழமை ஜேர்மனியில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
வி.இராசபாக்கியம் சச்சிதானந்தன்
(மைத்துனன்)

(20834) (29)

யாழ். மக்களுக்கு ஓர் அறிமுகம்! CD-DAWN

HERO HONDA
World No. 1
Two-Wheeler Company

2 Year warranty

HERO HONDA LEGENDARY MILEAGE

யாழ். நகரில் விலை
82,000 ரூபா மட்டுமே!

RG

இரத்தினகோபால்ஸ்

63,65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

021 222 6185 ☎ 0777 340056 (C/28716) (22-14-30)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.